தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

### தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் திங்கள்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணிநேர நிலவரப்படி, அருப்புக்கோட்டையில் 20 மி.மீ. மழையும், பாபநாசம், மணியாச்சி, திருச்சுழி ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

தமிழகதத்தில் வலுவிழந்த நிலையில் கரையைக் கடந்த மாதி புயல், அரபிக் கடலில் லட்சத்தீவுகளுக்கு அருகில் காற்றழுத்தத் தாழ்வு நிலையாக நிலைக்கொண்டுள்ளது.

### மீன் அங்காடி திறப்பு

தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் சார்பில், வாலாஜாபாத் அருகே மீன் அங்காடி திறக்கப்பட்டது.

காஞ்சிபுரம் அருகே வையாவூரில் தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் சார்பில் மீன் அங்காடி அமைக்கப்பட்டது.

இந்த அங்காடியின் திறப்பு விழா வெள்ளிக்கிழமை நடந்தது. மீனவர் நலவாரிய உதவி இயக்குநர் ரேகா தலைமை வகித்தார்.

மீன்வள கூட்டுறவுத் தலைவர் சேவியர் மனோகரன் கலந்து கொண்டு மீன் அங்காடியை திறந்து வைத்தார்.

விழாவில், மீன்வளத் துறையில் அரசு செயல்படுத்தும் திட்டம், மீனவர் நலன் குறித்து அதிகாரிகள் விளக்கினர்.

### நல்லெண்ணெய் விலை தொடர்ந்து ஏறுமுகம்

நல்லெண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த மாதம் லிட்டருக்கு ரூ. 215 ஆக இருந்த சாதா ரக நல்லெண்ணெய், தற்போது லிட்டர் 250 ரூபாயை தாண்டியுள்ளது. லிட்டர் ரூ. 235 ஆக இருந்த தும்பை ரக நல்லெண்ணெய் தற்போது ரூ. 265-க்கும் அதிகமாக விற்கப்படுகிறது. ஒரே மாதத்தில் ரூ. 30 வரையில் விலை அதிகரித்து இருப்பது பொதுமக்களை கவலையடையச் செய்துள்ளது. நல்லெண்ணெய் விலை கூடிக்கொண்டிருந்த போதும் பாமாயில், சூரியகாந்தி, தேங்காய், கடலை, ரைஸ்பிரான் எண்ணெய்களின் விலைகளில் குறிப்பிடும்படியான மாற்றமில்லை.

இது குறித்து, எண்ணெய் வியாபாரிகளிடம் கேட்டபோது, எள் விலை இரு மடங்காக உயர்ந்ததால், இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, 5 மாதங்களுக்கு முன் கிலோவுக்கு ரூ. 55 ஆக இருந்த எள், தற்போது ரூ. 110 ஆக உயர்ந்துவிட்டது. மோசமான பருவநிலை மற்றும் மழை காரணமாக கர்நாடகம், மேற்குவங்கம், குஜராத் போன்ற மாநிலங்களில் எள் உற்பத்தி அடியோடு பாதிக்கப்பட்டதாலும், நல்ல எள் ஏற்றுமதி செய்யப்படுவதாலும், நல்லெண்ணெய் விலை உயர்ந்திருப்பதாக, வியாபாரிகள் கூறினர். இந்த நிலையில் மாற்றம் ஏற்பட இன்னும் நான்கைந்து மாதங்கள் ஆகும். அதுவரையில் மேலும் விலை உயரக்கூடும் என்றனர்.

### காணை நோய் தாக்கி மாடு சாவு

வருசநாடு அருகே மூலக்கடையில் காணை நோய் தாக்கி மாடு பலியானது.

வருசநாடு அருகே மூலக்கடை பகுதியில் கடந்த வாரம் காணை நோய் தாக்கி 5 க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தன. இதனையடுத்து கால்நடை துறையினர் முகாமிட்டு, மாடுகளுக்கு சிகிச்சையளித்தனர். தடுப்பூசியும் போடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மூலக்கடையை சேர்ந்த பழனி என்பவரது மாடு கடந்த மூன்று நாட்களாக காணை நோய் தாக்கி சிகிச்சை பெற்று வந்தது. வெள்ளிக்கிழமை காலையில் சிகிச்சை பலனின்றி இறந்தது.

இறந்த மாட்டில் இருந்து நோய் பரவுவதை தடுக்க அதை குழி தோண்டிப் புதைத்தனர். இப்பகுதியில் கால்நடை மருத்துவர்கள் முகாமிட்டு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

## இளையான்குடி ஒன்றியத்தில் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்காப்பீடு செய்ய கோரிக்கை

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியத்தில் நடப்பாண்டு கூட்டுறவு கடன் சங்கங்களில் மட்டுமே விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய உத்தரவிட வேண்டும் என திமுக சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இது குறித்து இக் கட்சியின் ஒன்றியச் செயலாளரும் முன்னாள் எம்.எல்.ஏ வுமான சுப.மதியரசன் தெரிவித்துள்ளதாவது: இளையான்குடி ஒன்றியத்தில் கடந்தாண்டைப்போல இந்தாண்டும் பருவமழை தவறியதால் நெல்பயிர்கள் கருகத் தொடங்கியுள்ளன. இந்த ஒன்றியத்தில் கடந்தாண்டு பயிர்காப்பீடு செய்த விவசாயிகளுக்கு முழுமையாக இழப்பீடு வழங்கப்படவில்லை. மாவட்ட நிர்வாகம் இந்தாண்டு தனிக்கவனம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகளுக்கு முழுமையாக இழப்பீட்டுத் தொகை வழங்கச் செய்ய வேண்டும். மேலும் இந்த தொகையை வழங்குவதற்கு முன்பு நிலம், ஊர், வருவாய் பிரிவு வாரியாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும். தனியார் காப்பீட்டு நிறுவனங்களிலும் பிற வங்கிகளிலும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதை தடை செய்து, அந்தந்த பகுதியைச் சேர்ந்த கூட்டுறவு கடன் சங்கங்களில் மட்டுமே பயிர் காப்பீடு செய்ய உத்தரவிட வேண்டும்.

அப்போதுதான் உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை கிடைக்கச் செய்ய முடியும்.

மேலும் இப் பகுதியில் கடந்த இரு ஆண்டுகளாக விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் மாடுகளுக்கு வைக்கோல் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர் என்றார்.

## பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க வைகை பாசன விவசாயிகள் கோரிக்கை

பரமக்குடி வட்டார விவசாயிகள் கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் முழு விளைச்சல் கிடைக்காமல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும் என வைகை பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வைகை பாசன விவசாயிகள் சங்கக் கூட்டம் சனிக்கிழமை அதன் தலைவர் எஸ்.டி.தவசீலன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் விவசாயிகள் முழு விளைச்சல் பெறாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பயிர் காப்பீட்டு தொகையை உடனே வழங்க வேண்டும்.

இந்த ஆண்டும் போதிய மழையின்றி நெல், மிளகாய், பருத்தி விவசாயம் கருகி விட்டது. இதில் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ 20 முதல் 30 ஆயிரம் செலவிட்டு நஷ்டமடைந்துள்ளனர். இப்பகுதி விவசாயிகளுக்கு நஷ்டஈடாக ஏக்கருக்கு ரூ 30 ஆயிரம் மத்திய, மாநில அரசுகள் வழங்கிடக் கோரியும், விவசாயத் தொழில் இல்லாததால் ஆண்டுக்கு 200 நாள் வேலைத் திட்டத்தை உறுதியாக்கி, நாள் ஒன்றுக்கு ரூ 300 வழங்க வேண்டும். பரமக்குடி நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் குடிநீர் பஞ்சத்தை போக்க வைகை ஆற்றில் தண்ணீர் திறக்க மாவட்ட நிர்வாகம் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## வெள்ளாடு வளர்ப்புப் பயிற்சி முகாம்

திருவண்ணாமலை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில், புதுவாழ்வுத் திட்ட பயனாளிகளுக்கான வெள்ளாடு வளர்ப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது. திருவண்ணாமலையில் இயங்கி வரும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும், மாவட்ட புதுவாழ்வுத் திட்டமும் இணைந்து இப்பயிற்சி முகாமை நடத்தின. ஆராய்ச்சி மையத் தலைவர் சு.ராமகிருஷ்ணன் வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்டக் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்தார். மாவட்ட புதுவாழ்வுத் திட்ட இயக்குநர் செவத்தான் பயிற்சி முகாமின் நோக்கம் குறித்துப் பேசினார்.

இதில் கோட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் அன்பழகன், திருவண்ணாமலை மாவட்ட புதுவாழ்வுத் திட்ட உதவி மேலாளர்கள் சுபாஷ் சந்திரன், பழனிச்சாமி, ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் இரா.துரைராஜன், புதுவாழ்வுத் திட்ட அணித் தலைவர்கள் உமா, ஆனந்தன், பேராசிரியர் ரா.ராஜேஷ்குமார் மற்றும் புதுவாழ்வுத் திட்ட பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கரும்பு அரைவைப் பணி தொடக்கம்**

தருமபுரி மாவட்டம், அரூரை அடுத்துள்ள கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பாலக்கோடு சர்க்கரை ஆலைகளில் அரைவைப் பணிகள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கின.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 2013-14-ஆம் ஆண்டுக்கான அரைவைப் பணிகளைத் தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் தொடக்கிவைத்தார்.

விழாவில், மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், சர்க்கரை ஆலைத் தலைவர் வளர்மதி முருகேசன், அதிமுக ஒன்றியச் செயலர்கள் ஆர்.ஆர்.முருகன், என்.ராஜேந்திரன், குப்புசாமி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் சி.தென்னரசு, லலிதா குப்புசாமி, பி.கே.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

1.25 லட்சம் டன் கரும்பு அரைவை இலக்கு: சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் நிகழாண்டில் சுமார் 1.25 லட்சம் டன் கரும்பு அரைவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக, அதன் மேலாண்மை இயக்குநர் பொ.ரத்தினவேலு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிகழாண்டு அரைவைப் பருவத்துக்கு அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரப் பகுதியில் 10,154 ஏக்கர் கரும்பு பயிர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிலவிய கடும் வறட்சியால் கரும்பு விளைச்சல் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கரும்பு உற்பத்தியும் குறைந்துள்ளது.

இந்த நிலையிலும், நிகழாண்டில் சுமார் 1.25 லட்சம் டன் கரும்பு அரைவை செய்ய சர்க்கரை ஆலை நிர்வாகம் சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விளை நிலங்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட கரும்புகளைச் சர்க்கரை ஆலைக்கு கொண்டு வரும் பணியில் 78 லாரிகள், 86 டிராக்டர்கள், 57 டிப்பர், 46 டயர் மாட்டு வண்டிகள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 27 நிழல்வலைக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதில், அதிகளவில் கரும்பு பரு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல, நிகழ் பருவத்தில் புதியதாக 11 நிழல் வலைக் கூடங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வரும் ஆண்டில் கூடுதலாக கரும்பு உற்பத்தி இருக்கும் என்றார் அவர்.

பாலக்கோடு சர்க்கரை ஆலை: பாலக்கோடு அருகே திம்மனஅள்ளி கிராமத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிகழாண்டுக்கான கரும்பு அரைவைப் பணி தொடக்க விழா தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

மாநில உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் கரும்பு அரவைப் பணியைத் தொடக்கிவைத்தார்.

இந்த ஆலையில் நிகழாண்டில் அரைவைப் பருவத்துக்கு 75,000 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 2000 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்படும்.

நிகழாண்டில் பருவ மழை போதிய அளவு பெய்யாததால் அரைவைப் பணி குறைவாக இருக்கும் என ஆலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

விழாவில், பாலக்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் நிர்வாகக் குழுத் தலைவர் ஞானமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் தலைவர் டி.ஆர்.அன்பழகன், மாவட்ட கூட்டுறவு ஆலை மேலாண் இயக்குநர் பொ.ரத்தினவேலு, நிர்வாகக் குழுத் தலைவர் கே.வி.ரங்கநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், கோட்டாட்சியர் பி.மேனகா, வட்டாட்சியர் லதா மற்றும் தொழில்சங்க நிர்வாகிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**பயறு வகை பயிர்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

பயறு வகைப் பயிர்கள் குறித்த இலவசப் பயிற்சி மோகனூர் வட்டாரம் பரளி, ஒருவந்தூர் கிராமங்களைச் சேர்ந்த 60 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

இரு நாள்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு மோகனூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் என்.கிருஷ்ணசாமி தலைமை வகித்து, தமிழக அரசின் 2013-14ஆம் ஆண்டுக்கான விவசாய மானியத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். வேளாண் அலுவலர் சு.ஹேமலதா, சொட்டு நீர்ப் பாசனத்தில் துவரைப் பயிர் நாற்று விட்டு நடவு செய்யும் முறை குறித்து கூறினார். பயறு வகைப் பயிர்களில் அதிக மகசூல் பெறுவதற்கான முக்கிய தொழில்நுட்பமாகிய டிஏபி 2 சத கரைசல் தெளிக்கும் முறை குறித்து துணை வேளாண்மை அலுவலர் ஆர்மணி விளக்கினார். பயறு வகைப் பயிர் விதைகளை சைசோபியம் விதை நேர்த்தி செய்வது குறித்து உதவி வேளாண்மை அலுவலர்கள் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், மோகன்ராஜ், அட்மா அலுவலர்கள் செய்திருந்தனர்.

### கோமாரி நோய்க்கு 15 மாடுகள் சாவு

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டத்தில் கோமாரி நோய்த் தாக்குதலுக்கு இதுவரை 15-க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன. அவற்றுக்கு உரிய நிவாரண உதவி வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

பரமத்தி வேலூர் வட்டம், எஸ்.வாழவந்தி அருகே உள்ள மேலப்பட்டி, கே.ரசாம்பாளையம் பகுதியிலுள்ள மாடுகள் கோமாரி நோயால் பாதிப்பட்டன. மேலப்பட்டியைச் சேர்ந்த சஞ்சீவி, சுப்பிரமணி, கம்பர், சின்னுசாமி, செந்தில் உள்ளிட்டோரின் மாடுகளும், ராமசாமி, பழனிச்சாமி ஆகியோரின் நான்கு மாடுகளும் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தன.

கே.ரசாம்பாளையத்தைச் சேர்ந்த ரங்கசாமியின் இரு மாடுகளும், பொன்னுசாமியின் மாடும் கோமாரி நோய் தாக்கி உயிரிழந்தன.

மேலும், இந்தப் பகுதிகளில் இதுவரை கோமாரி நோய்த் தாக்குதலுக்கு 15-க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன.

இதுகுறித்து அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது:

கோமாரி நோய் தாக்கம் அதிகம் உள்ள மாடுகளுக்கு அரசே மருந்து, மாத்திரைகளை வழங்க வேண்டும். உயிரிழந்த மாடுகளுக்கு அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றனர் அவர்கள்.

### மக்காச்சோளப் பயிர்களை சேதப்படுத்தும் குருவிகள்

தம்மம்பட்டி, கெங்கவல்லி பகுதிகளில் மக்காச்சோளப் பயிர்களை குருவிகள் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி, தம்மம்பட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இந்தப் பயிர்கள் இன்னும் சில வாரங்களில் அறுவடை செய்யப்படும் நிலையில் இருந்து வருகிறது.

இந்த நிலையில், மக்காச்சோளப் பயிர்களை காலை, மாலை நேரங்களில் குருவிகள் கூட்டம் கூட்டமாக வந்து கொத்தி தின்று சேதப்படுத்தி வருகின்றன. அவற்றை

வயல்களில் இருந்து விரட்ட விவசாயிகள் பல்வேறு முறைகளை கையாண்டு வருகின்றனர். ஆனால், குருவிகள் பயிர்களைச் சேதப்படுத்துவதைத் தடுக்க முடியவில்லை என்று விவசாயிகள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயி கார்த்திகேயன் கூறியது:

மக்காச்சோளம் மூட்டை ரூ.1,300-க்கு விற்பனையாகிறது.

ஏற்கெனவே தற்போது மகசூல் குறைவாகக் கிடைக்கும் நிலை இருந்து வருகிறது. இந்த நிலையில் குருவிகளும் பயிர்களைச் சேதப்படுத்தி வருவதால் மகசூல் மேலும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இதனால், செலவை ஒப்பிடும்போது வருமானம் குறைவாகவே கிடைக்கும் என்றார் அவர்.

### ஆத்தூரில் விற்பனைக்கு வந்த பெரிய பூசணிக்காய்

ஆத்தூரை அடுத்துள்ள தாண்டவராயபுரம் பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி சுப்பராயன் (45). இவர் தனது தோட்டத்தில் விளைந்த 25 கிலோ எடை கொண்ட பெரிய அளவிலான பூசணிக்காயை ஞாயிற்றுக்கிழமை ஆத்தூர் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தார்.

இந்தப் பூசணிக்காயை வியாபாரிகள், பொதுமக்கள் ஆச்சர்யத்துடன் பார்த்துச் சென்றனர்.

### பால் உற்பத்தியாளர்கள் ஜனவரி 1 முதல் போராட்டம்

தீவனப் பொருள்களின் விலை உயர்ந்திருப்பதால், தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என வலியுறுத்தி, ஜனவரி 1-ஆம் தேதி முதல் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் சேலத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் தலைமை வகித்தார்.

பொதுச் செயலர் எம்.ஜி.ராஜேந்திரன், துணைத் தலைவர் எம்.பத்மநாபன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் கே.ஏ.செங்கோட்டுவேல் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் கடந்த ஓராண்டில் தீவனப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சாதா தவிடு விலை 100 சதம் உயர்ந்துள்ளது. கருக்கா தவிடு விலை 62 சதமும், கம்பு, கடலைப் பிண்ணாக்கு, பருத்தி விதை, சோயா பிண்ணாக்கு போன்றவற்றின் விலைகள் 50 சதமும் உயர்ந்துள்ளன. பால் உற்பத்திச் செலவு வெகுவாக உயர்ந்துள்ளதால், கால்நடை வளர்ப்போர் நஷ்டமடைந்து வருகின்றனர்.

எனவே, பால் கொள்முதல் விலையில் பசும்பாலுக்கு இப்போது வழங்கப்படும் ரூ.20-இல் இருந்து ரூ.10 உயர்த்தி ரூ.30 வழங்க வேண்டும். அதேபோல, எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூ.26-இல் இருந்து ரூ.15 உயர்த்தி 41 ரூபாயாக வழங்க வேண்டும்.

அதைபோல, மாநிலம் முழுவதும் கோமாரி நோயால் உயிரிழந்த மாடுகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கோரி தமிழக அரசிடம் பலமுறை முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், வரும் ஜனவரி 1-ஆம் தேதி முதல் தமிழகம் முழுவதும் காலவரையற்ற பால் உற்பத்தி நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும்.

மேலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்குவது நிறுத்தப்படுவதுடன், மாடு, கன்றுகளுடன் சாலை மறியல் போராட்டமும் நடைபெறும் என்றார் அவர்.

## நிலக்கடலையில் கூடுதல் மகசூல்: வேளாண் துறை யோசனை

நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய அதிகாரிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் ரெ. சதானந்தம், வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன் ஆகியோர் வெளியிட்ட கூட்டறிக்கை:

மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் மார்கழிப் பட்ட இறவை நிலக்கடலை சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் தயாராகி வருகின்றனர். இந்நிலையில் நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற நிலக்கடலைச் செடியின் எண்ணிக்கையைப் பராமரிப்பது அவசியமாகும்.

நிலக்கடலையில் கூடுதல் மகசூல் கிடைக்க செடிகளின் எண்ணிக்கை முக்கியமான காரணியாகும். செடியின் எண்ணிக்கை நிலக்கடலையில் சரியாகப் பராமரிக்கப்படவில்லையெனில் விவசாயிகள் எவ்வளவு உரம் இட்டாலும் செலவு செய்தாலும் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்காமல் போய்விடும். மேலும் நெருக்கமாக விதைப்பு செய்வதால் பயிர்களுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காததோடு பூச்சிநோய்த் தாக்குதல் அதிகரிக்கும்.

பயிர் இடைவெளி: செடி எண்ணிக்கையைச் சரியாகப் பராமரிக்க வேண்டுமெனில் விதைக்கு விதை இடைவெளிவிட்டு விதைப்பது மிக முக்கியமானதாகும். விதை விதைக்கும்போது வரிசைக்கு வரிசை ஒரு அடியும் (30 செ.மீ.), செடிக்குச் செடி 10 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். விதைக்கப்படும் விதை 4 செ.மீ ஆழத்திற்கும் கீழே சென்றுவிடக்கூடாது.

மேற்கண்ட இடைவெளியில் நிலக்கடலை விதைக்கப்படும் போது ஒரு சதுர மீட்டருக்கு 33 கடலைச் செடிகள் கிடைக்கும். இதனை எளிதாகக் கண்டுபிடிக்க

ஒரு பெரிய சைக்கிள் டயருக்குள் 11 செடிகள் இருக்க வேண்டும். அப்போதுதான் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கும்.

பயிர் எண்ணிக்கையைச் சீராகப் பராமரிக்க...

தரமான விதைகளை பயன்படுத்தவேண்டும். தேவையான அளவு விதை பருப்பை (ஒரு ஏக்கருக்கு 50-55 கிலோ) பயன்படுத்த வேண்டும். தூய்மையான நன்கு முற்றிய திரட்சியான பொறுக்கு விதைகளைப் பயன்படுத்த வேண்டும்.

விதை நோ0த்தி செய்து விதைக்க வேண்டும். நிலத்தைத் தயார் செய்யும்போது நன்கு சமன் செய்வதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். விதைப்பில் நன்கு அனுபவமும் பயிற்சியும் பெற்ற நபர்களைக் கொண்டு விதைக்க வேண்டும்.

இறவை நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் மேற்கண்ட வழிமுறைகளைத் தவறாது கடைபிடித்து நிலக்கடலையில் பயிர் எண்ணிக்கை குறையாமல் பராமரித்தால் கூடுதல் மகசூல் பெறலாம்.

### கோமாரி நோய்: கால்நடைகளை இழந்தோருக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தல்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோமாரி நோயால் இறந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டையில் மாநிலத் தலைவர், சிவகங்கை சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். குணசேகரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அச்சங்கத்தின் மாநில நிர்வாகக்குழு மற்றும் மாவட்டச் செயலர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், காவிரி - குண்டாறு இணைப்புத்திட்டத்தை விரைவு படுத்த வேண்டும், தஞ்சை மாவட்டத்தில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தைக்கைவிட வேண்டும்.

2012-13 ஆண்டில் செய்யப்பட்ட பயிர்க்காப்பீடுகளுக்கு தாமதமின்றி இழப்பீடு வழங்க வேண்டும். வெளிநாடுகளிலிருந்து கலப்பட உரங்களை இறக்குமதி செய்த

உர நிறுவனம் மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், மாநிலத்துணைத்தலைவர் பி.எஸ். மாசிலாமணி, மாவட்டச்செயலர்கள் மு. மாதவன், கண்ணு, நல்லையா, சிவசூரியன், ராஜேந்திரன், பன்னீர்செல்வம், ராமசாமி உள்ளிட்ட 15 மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலர் த. செங்கோடன், நிர்வாகி எஸ். சி. சோமையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் வழங்கல்**

புதுக்கோட்டை வட்டார விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் வேளாண் இடுபொருள்கள் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

புதுக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் தலைமை வகித்தார்.

வேளாண் துணை இயக்குநர் (மத்திய அரசுத் திட்டம்) சதானந்தம் பங்கேற்று விவசாயிகள் 15 பேருக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கிப் பேசியது:

வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் (நெல்) கீழ் 100 ஹெக்டேர் திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் (நெல்) கீழ், திருந்திய நெல் சாகுபடி செயல்விளக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் - பயறு குழுமம் கீழ் துவரை நடவு செயல்விளக்கம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார்.

இதில், வேளாண் அலுவலர் (மத்திய அரசுத் திட்டம்)ஆர். ஜெகதீஸ்வரி மற்றும் வேளாண் அலுவலர் இரா. பூபதிகண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை வேளாண் விரிவாக்க மைய கண்காணிப்பாளர் கலியுகவரதன், உதவி வேளாண் அலுவலர்கள் கோ. சக்திவேல், சீ. கலைச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

**பயிர் காப்பீட்டு பிரீமியம் செலுத்தும்தேதியை நீட்டிக்க வலியுறுத்தல்**

கடன் பெறாத விவசாயிகள் தேசிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் பிரீமியம் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் நாகை மாவட்டச் செயலாளர் எம். செல்வராசு, முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனு:

கடன் பெறாத விவசாயிகள், தேசிய பயிர்க் காப்பீடு திட்டத்தில் பிரீமியம் செலுத்துவதற்கான கடைசி தேதி

டிச. 15 என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழாண்டில், கடைமடை பகுதியை காவிரி தண்ணீர் வந்தடையவில்லை.

இதனால், இந்தப் பகுதிகளில் சம்பா சாகுபடி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. காலம் தாழ்த்தி விதைப்பு செய்யப்பட்ட நேரடி நெல் பயிர்கள் காற்றழுத்த தாழ்வு நிலையில் ஏற்பட்ட மழையால் பாதிப்புக்குள்ளாகின.

இயற்கை சீற்றங்களிலிருந்து நெல் பயிர்களைக் காப்பாற்றுவதிலேயே பெரும் கவனம் செலுத்திய விவசாயிகளால், பயிர்க் காப்பீடு பிரீமியத்தில் கவனம் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது.

மேலும், 5 அல்லது 6 கிராமங்களுக்கு ஒரு கிராம நிர்வாக அலுவலர் மட்டுமே பணியிலிருப்பதால், பயிர்க் காப்பீட்டுக்கான சான்றுகளைப் பெறுவதிலும் விவசாயிகளுக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு, நிகழாண்டில் பயிர்க் கடன் பெறாத விவசாயிகள்,

தேசிய பயிர்க் காப்பீட்டு பிரீமியம் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீட்டித்து வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### குடவாசலில் 55.6 மி.மீ.,சீர்காழியில்27.2 மி.மீ. மழை

திருவாரூர் மாவட்டம், குடவாசலில் வியாழக்கிழமை 55.6 மில்லி மீட்டர் மழைப் பதிவானது.

வங்கக் கடலில் உருவான மாதி புயலால் திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு:

திருவாரூர் - 25.4, வலங்கைமான் - 25.2, நன்னிலம் - 18.4, மன்னார்குடி - 14, திருத்துறைப்பூண்டி - 13.4, பாண்டவையாறு தலைப்பு - 13.4, முத்துப்பேட்டை - 11.6. சீர்காழியில் 27.2 மி.மீ. மழை: நாகை மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை முதல் பிற்பகல் வரை பலத்த காற்றுடன் மழை பெய்தது. பின்னர், மாவட்டத்தில் குறிப்பிட்டத்தக்க அளவில் மழையில்லை. வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக சீர்காழியில் 27.2 மி.மீ. மழை பதிவானது. பிற பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்): கொள்ளிடம் (ஆணைக்காரன் சத்திரம்) - 25.5, திருப்பூண்டி- 24.4, நாகப்பட்டினம்- 19.8, மயிலாடுதுறை- 19.6, தலைஞாயிறு- 18.8, மணல்மேடு- 15.8, வேதாரண்யம்- 9. மாதி புயல் கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மையம் அறிவித்ததைத் தொடர்ந்து, நாகை துறைமுக அலுவலகத்தில் ஏற்றப்பட்டிருந்த 3-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு வெள்ளிக்கிழமை காலை இறக்கப்பட்டது.

### உயிரியல் கொல்லிகள் குறித்த இலவசப் பயிற்சி

பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், உயிரியல் கொல்லிகள் குறித்த இலவச பயிற்சி வகுப்பு டிச. 17-ம் தேதி நடைபெற உள்ளது என்றார் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். பி. வெங்கடேசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தற்போது சாகுபடி செய்யும் பயிர்களில் பூச்சிகள், நோய்கள், தாவர நூற்புழுக்கள் ஆகியவை அதிகமாக தாக்கி, பயிரின் வளர்ச்சி குன்றி மகசூல் இழப்பு

ஏற்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த, விவசாயிகள் ரசாயன பூச்சிக் கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதனால், புதிய வகை பூச்சிகளும், நோய்களும் தோன்றி, பயிருக்கு நன்மை தரக்கூடிய பூச்சிகளை அழிக்கின்றன.

இதன்மூலம், சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படுவதோடு உணவில் விஷத்தன்மை ஏற்பட்டு, தீமை செய்யும் பூச்சிகளுக்கு எதிர்ப்புத் திறன் உண்டாக்குகிறது. ரசாயன பூச்சிக்கொல்லிகள் நன்மை செய்வதை விட, அதிகளவு தீமை செய்கிறது. எனவே, உயிரியல் கொல்லிகளை பயன்படுத்தி, பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தி பயிர் சாகுபடி செய்வது குறித்த தொழில் நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு காணொளி காட்சி மூலம் விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வேளாண் அறிவியல் மையத்தில் டிச. 17-ம் தேதி காலை 10 மணி முதல் 3 மணி வரை நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293592, அல்லது பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுநரை 9787620754 என்ற தொலைபேசி எண்களில் காலை 9.30 முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

**துவரை சாகுபடிக்கு மானிய விலையில் மருந்துகள்**

துவரை சாகுபடிக்குத் தேவையான பூச்சி மருந்துகள் 50 சதவீத மானியத்தில் வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வழங்கப்படுகின்றன.

இது குறித்து மேல்மலையனூர் வேண்மை உதவி

இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட செய்தி குறிப்பு:

அவலூர்பேட்டை, சாத்தாம்பாடி, மேல்மலையனூர் ஆகிய பகுதிகளில் 600 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் துவரை சாகுபடி செய்துள்ளனர். தற்போது, இத் துவரை பூக்கும் நிலையில் மொட்டுக்களுடன் காணப்படுகின்றன. சாறு உறிஞ்சும் பூச்சிகள், காய் துளைப்பான் இலை உண்ணும் புழுக்கள், மொட்டு, பூ தின்னும் புழுக்கள் என பல்வேறு வகையான பூச்சித் தாக்குதல்களால் மகசூல் இழப்பு

ஏற்படுகிறது.  பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 விளக்கு பொறிகள் அமைத்து தீமை செய்யும் பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும். 5 சதவீதம் அளவுள்ள வேப்பங்கொட்டை சாறை பயன்படுத்தலாம். வேப்ப எண்ணெய், தாவர கரைசல், பஞ்ச கவியம் ஆகியவற்றில் எதையாவது ஒன்றை 3 சதவீதம் தெளிக்கலாம். அசாடிரோக்டின் 0.03 சதவீதம் ஏக்கருக்கு ஒரு லிட்டர் தெளிக்கலாம். ஏக்கருக்கு 200 மி.லி. ரண்டாக்சிகார்ப் பூச்சி மருந்தினையும் தெளிக்கலாம்.  இன கவர்ச்சி பொறி, விளக்கு பொறி, அசாடிரோக்டின் போன்ற மருந்துகளை 50 சதவீத மானியத்தில் பெறுவதற்கு விவசாயிகள் வேளாண்மை உதவி அலுவலர்களை அனுகலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பருத்தி வாரச் சந்தை தொடக்கம்**

கள்ளக்குறிச்சியில் பருத்தி வாரச் சந்தை வெள்ளிக்கிழமை தொடங்கியது.

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி வாரச் சந்தை ஆண்டு தோறும் நடக்கிறது. தற்போது பருத்தி விளைச்சலுக்கான பருவம் என்பதால் வெள்ளிக்கிழமை பருத்தி வாரச் சந்தை தொடங்கப்பட்டது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் பச்சையாபிள்ளை, மேலாண்மை இயக்குநர் பாண்டியன், மேலாளர் ரவிச்சந்திரன், துணைத் தலைவர் ராஜு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முதல் நாளன்று 106 எல்.ஆர்.ஏ., பஞ்சு ரக மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. ஒரு குவிண்டால் அதிக பட்சமாக ரூ.4,655-க்கும், குறைந்தபட்சமாக ரூ.4,109-க்கும் விலை போனது. இதில்  ரூ.1.60 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. இந்த வாரச் சந்தையில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், வியாபாரிகள் பங்கேற்றனர்.

இந்த ஆண்டு விற்பனை இலக்காக ரூ.16 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், விவசாயிகள் கொண்டு வரும் பஞ்சுக்கு உடனே பணம் பட்டுவடா செய்யப்படுவதாகவும் கள்ளக்குறிச்சி மேலாண்மை கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநர் பாண்டியன் தெரிவித்தார்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## அரிசி ஆலை தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆத்துாரில் ரூ.35 கோடி வர்த்தகம் பாதிப்பு



ஆத்தூர்:

ஆத்துாரில், அரிசி ஆலை தொழிலாளர்கள், கூலி உயர்வு கேட்டு, வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால், 35 கோடி ரூபாய்க்கு மேல், வர்த்தகம் பாதித்-துள்ளது. சேலம் மாவட்டம், ஆத்தூர் பகுதியில், 38 அரிசி ஆலைகள் இயங்கி வரு-கின்றன.இந்த ஆலைகளில், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, தொழிலாளர்க-ளுக்கு கூலி உயர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு, 75 முதல் 100 சத-வீதம் கூலி உயர்வு வழங்கும்படி, சேலம் மாவட்ட அரிசி ஆலை தொழிலாளர்கள் – ஏ.ஐ.டி.யு.சி., சங்கம் சார்பில், கோரிக்கை விடுக்கப்பட்டது.அதற்கு, அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒப்புக் கொள்ளாததால், நவ., 1ம் தேதி முதல், தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.நான்காம் கட்டமாக நடந்த பேச்சில், பெண் தொழிலாளர் களுக்கு, வேலைக்கான கூலி மற்றும் போனஸ் தொகை வழங்குவதில், உடன்பாடு ஏற்பட்டது.ஆனால், நெல் வேக வைத்தல், மூட்டை துாக்குதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்-

களின் கூலி உயர்வு குறித்து நடைபெற்ற ஐந்து கட்ட பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. இந்த வேலை நிறுத்த போராட்டத்தால், 35 கோடி ரூபாய்க்கு மேல், வர்த்தகம் பாதித்துள்

**கோதுமை, பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரிக்கும் : பயிரிடும் பரப்பு உயர்ந்துள்ளது**



புதுடில்லி: கோதுமை, பருப்பு வகைகள், மக்காச் சோளம், எண்ணெய் வித்துக் கள் உள்ளிட்டவற்றின் பயிரிடும் பரப்பளவு சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதையடுத்து, நடப்பாண்டில் நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி சாதனை அளவை எட்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.மத்திய பிரதேசம்இதற்கு சான்றாக, கடந்தாண்டை காட்டிலும், நடப்பாண்டில் இதுவரையிலுமாக, மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில், கோதுமை பயிரிடும் பரப்பளவு முறையே, 14.53 லட்சம் ஹெக்டேர் மற்றும் 12.65 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது.

மேலும், ராஜஸ்தான் மற்றும் பீகார் மாநிலங்களிலும், கோதுமை பயிரிடும் பரப்பளவு முறையே, 4.95 லட்சம் ஹெக்டேர் மற்றும் 3.94 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.இதையடுத்து, உள்நாட்டில், இதுவரையிலுமாக, கோதுமை பயிரிடும் பரப்பளவு ஒட்டு மொத்த அளவில், 253.75 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.இது, கடந்தாண்டு இதே காலத்தில், 227.52 லட்சம் ஹெக்டேராக குறைந்து காணப்பட்டது.இதே போன்று, பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவும், 119.73 லட்சம் ஹெக்-

டேரிலிருந்து, 123.60 லட்சம் ஹெக்டேராக வளர்ச்சி கண்டுள்ளது.மேலும், மக்காச் சோளம் பயிரிடும் பரப்பும், 8.75 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 9.18 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.ராஜஸ்தான்ராஜஸ்தான் மாநிலத்தில், கடுகு பயிரிடும் பரப்பு, 2.41 லட்சம் ஹெக்டேர் அதிகரித்து, 29.73 லட்சம் ஹெக்டேராக உயர்ந்து உள்ளது. இதையடுத்து, ஒட்டு மொத்த எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு, 75.85 லட்சம் ஹெக்டேரில் இருந்து, 77.78 லட்சம் ஹெக்டேராக சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது.இருப்பினும், நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு, கடந்தாண்டை விட, நடப்பாண்டில், 3.21 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.

இது தவிர, கம்பு பயிரிடும் பரப்பும், 36.97 லட்சம் ஹெக்டேரில் இருந்து, 34.06 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இதையடுத்து, இதர உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பு, மதிப்பீட்டு காலத்தில், 53.05 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 50.23 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.அதேசமயம், நடப்பாண்டில் கொண்டைக்கடலை பயிரிடும் பரப்பு, 85.29 லட்சம் ஹெக்டேராக வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, 4.5 லட்சம் ஹெக்டேர் அதிகம் என, வேளாண் அமைச்சகம் தெரிவித்துஉள்ளது.கொண்டைக்கடலைஒட்டு மொத்த அளவில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டில், குளிர்கால பயிர்களான கடுகு, கொண்டைக்கடலை, மக்காச் சோளம் ஆகியவற்றின் பயிரிடும் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால், நடப்பாண்டில் தானியங்கள் உற்பத்தி, சாதனை அளவை எட்ட வாய்ப்புள்ளது என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**சம்பா நெற்பயிரை அழிக்கும் எலிகளுக்கு கிட்டி ஆந்திர வேட்டையர்கள் தமிழகம் வருகை**

பொன்னேரி: சம்பா சாகுபடியில் உள்ள விளை நிலங்களில், எலி தொல்லை அதிகரித்து உள்ளதால், அவற்றை பிடிப்பதற்கு ஆந்திராவில் இருந்து வேட்டையாளர்கள் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.மீஞ்சூர் ஒன்றியத்தில், 26

ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், சம்பா பருவத்திற்காக, நெல் பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது, பயிர்கள் தூர்கட்டும் பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ளன. ஜனவரி, முதல் வாரத்தில், பயிர்கள் அறுவடைக்கு தயாராகி விடும். பூத்திருக்கும் நெற்கதிர்களை, எலிகள் கடித்து உண்ணுகின்றன. இதனால், அறுவடைக்கு தயாராகும் நெற்பயிர்கள் பாதிப்படைந்து வருகின்றன.மீஞ்சூர் ஒன்றியத்தில், மெதூர், ஆசானபூதூர், பனப்பாக்கம், இலுப்பாக்கம், கோளூர், வேம்பேடு உள்ளிட்ட கிராமங்களில் எலிவேட்டை ஆரம்பம் ஆகி உள்ளது.இது குறித்து, பனப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பிரபு கூறுகையில், "குறைந்த மழையின் காரணமாக, கடந்த ஆண்டைவிட, இம்முறை எலிகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. மழை இருந்தால், வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்கும். எலிகளால் வலைகள் உருவாக்க முடியாது. இதனால், விளை நிலங்கள் பாழாகி வருகின்றன," என்றார். எலிக்கு ரூ.10வயல் வெளிகளில், எலிகளின் ஆதிக்கம் அதிகரித்து உள்ளதை தொடர்ந்து, அவற்றை பிடிக்க, ஆந்திராவில் இருந்து வேட்டையர்கள் வரவழைக்கப்பட்டு உள்ளனர். இவர்கள், மெதூர் கிராமத்தில் முகாமிட்டு எலிகளை பிடிக்க, பொறிகளை தயார் செய்து வருகின்றனர். ஒரு ஏக்கருக்கு, 200 பொறிகள் வைக்கப்படுகின்றன. அதில், குறைந்தது, 100 எலிகள் சிக்குகின்றன.எலி வேட்டையில் ஈடுபட்டு வரும், ஆந்திர மாநிலம், குருவாடா பகுதியைச் சேர்ந்த சுப்பையா கூறுகையில், "ஆறு மாதத்திற்கு ஒரு முறை, இப்பகுதிக்கு வந்து எலிகளை வேட்டையாடி வருகிறோம். ஒரு எலி பிடிக்க, 10 ரூபாய் கட்டணம் வசூலிக்கிறோம்," என்றார்.விஷ சாக்லெட்மீஞ்சூர் ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குநர் ரேவதி கூறுகையில், " அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள விளை நிலங்களில், எலிகள் அதிகமாக காணப்படும்.

வேளாண்மைத் துறை சார்பில், ஒவ்வொரு கிராமத்திலும், 110 விவசாயிகளுக்கு 'ரோபான் கேக்குகள் (விஷ சாக்லெட்)' வழங்கப்படுகின்றன," என்றார்.

மேலும், "இவற்றை, அறுவடை முடிந்தவுடன் வயல் வெளிகளில் உள்ள பொந்துகளில் வைத்துவிடவேண்டும். அதை உண்ணும் எலிகள், தண்ணீர் கிடைக்காமல் மாண்டுவிடும். அடுத்த பருவம் பயிரிடும்போது, எலிகளின் ஆதிக்கம் இந்த வகையில் கட்டுப்படுத்தப்படும்," என்றார்.

**சேனைக்கிழங்கு சாகுபடி செய்வதில் தியாகதுருகம் விவசாயிகள் ஆர்வம்**

தியாகதுருகம்: மணிமுக்தா அணை பகுதியில் சேனை கிழக்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சமையலில் மக்கள் விரும்பி உண்ணும் கிழங்கு வகைகளில் கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு முக்கிய இடம் வகிக்கிறது. கருணை கிழங்கு சாகுபடி செய்து தியாகதுருகம் பகுதி விவசாயிகள் பலர் லாபம் ஈட்டி வருகின்றனர். இதில் சேனைக்கிழங்கு பயிரிடுவதில் சிலர் சோதனை முயற்சியில் இறங்கியுள்ளனர். சூளாங்குறிச்சி அருகே உள்ள மணிமுக்தா அணை பகுதியில் சூ.பாலப்பட்டு விவசாயிகள் சிலர் சேனைக்கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். இந்த பயிர் 8 மாதத்தில் வளர்ந்து பலன் தரக்கூடியதாகும். அளவான ஈரப்பதம் இருந்தாலே நன்குவளர்ந்து பலன் தருகிறது.இதற்கு பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. இதனால் அதிக பரப்பில் சேனைக்கிழங்கு பயிரிட்டு நல்ல லாபம் பெறமுடியும். வெளி மார்கெட்டில் இதற்கு நல்ல கிராக்கி இருப்பதால் வியாபாரிகள் நேரடியாகவே வயலுக்கு வந்து கொள்முதல் செய்து கொள்கின்றனர். இதனால் எளிதில் விற்பனை செய்து லாபம் ஈட்ட முடியும்.செம்மண் வளம் நிறைந்த இப்பகுதியில் சாகுபடி செய்துள்ள சேனைக்கிழங்கு செடிகள் நன்கு செழித்துள்ளதால் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பண்ணை குட்டைகள் மூலம் கூடுதல்...வரத்து கால்வாய் அமைக்க வேண்டும்**

விழுப்புரம்: அரசு சார்பில் அமைக்கும் பண்ணை குட்டைகள் மூலம், கிராம ஊராட்சிக்கும், விவசாயிகளுக்கும் கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் வரத்து கால்வாய்களை சீர் செய்து, இந்த குட்டைகளுக்கு இணைப்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் அனைத்து ஊராட்சிகளிலும் பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி நடக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு அல்லது மூன்று பண்ணை குட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஊராட்சிக்கு சொந்தமான இடம் மற்றும் விருப்பம் உள்ள விவசாயிகளின் நிலங்களிலும் பண்ணை குட்டைகள் அமைக்கப்படுகின்றன.

இதற்காக தேர்வு செய்யும் இடத்திற்கு, ஊராட்சி தலைவர்கள் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு, பி.டி.ஓ., அலுவலத்திலுள்ள இன்ஜினியர்கள் மூலம் திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகின்றன. இந்த குட்டைகள் 25 மீட்டர் நீளம், 25 மீட்டர் அகலத்தில் அமைக்கப்படுகின்றன. சில இடங்களில் பரப்பளவு குறைவாக இருந்தால், அதற்கு ஏற்ப அளவுகளை மாற்றியும் பண்ணைக் குட்டைகள் 75 ஆயிரம் ரூபாய் முதல், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படுகின்றன.

வேலை வாய்ப்பு

தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம், இதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் வேலை செய்வோருக்கு, தினம் 148 ரூபாய் கூலியாக வழங்கப்படுகின்றன. இதில் 90 சதவீதம் அளவிற்கு பெண்கள் தான் வேலை செய்கின்றனர். இத்திட்டத்தின் மூலம் கிராம மக்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. பொது பண்ணை குட்டைகளை ஊராட்சி நிர்வாகமும், தனியார் குட்டைகளை அந்தந்த நிலத்தின் உரிமையாளர்களும் பாதுகாத்து, பராமரிக்க வேண்டும்.

மீன் வளர்ப்பு

இவ்வாறு அமைக்கும் பண்ணை குட்டைகள், அனைத்து பணிகளும் முடிந்த பின், மாவட்ட மீன் வளத் துறை உதவி இயக்குனருக்கு பரிந்துரை செய்யப்படுகின்றன.

அந்த குட்டைகளில் வளர்ப்பதற்கு தேவையான மீன் குஞ்சுகளும் வழங்கப்படுகின்றன. இவற்றை நன்கு வளர்த்து விற்பனை செய்வதன் மூலம் ஊராட்சிக்கும், விவசாயிகளுக்கும் கூடுதல் வருமானம் கிடைக்கிறது.
நீர்மட்டம் உயர்வு இவ்வாறு கிராமங்கள் தோறும் அமைக்கப்படும் பண்ணை குட்டைகளில், ஆண்டு முழுவதும் நீர் தேங்கி நிற்க வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப் படுகிறது. மேலும் மீன் பிடி தொழிலில் பலரும் வேலைவாய்ப்பு பெறுவதோடு, வைட்டமின் சத்துகள் நிறைந்த தரமான மீன்கள் மக்களுக்கு கிடைப்பதால், உணவு தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது. வரத்து கால்வாய் தற்போது அமைக்கும் பண்ணை குட்டைகள் குறைந்த ஆழம் உள்ளது. இதிலிருந்து எடுக்கும் மண் மூலம், நான்கு புறமும் கரைகள் அமைக்கின்றனர். இதனால் நேரடியாக பெய்யும் மழை நீர் மட்டுமே, இந்த குட்டையில் தேங்கி நிற்கும் வாய்ப்பு உள்ளது. மழை குறைவாக பெய்யும் ஆண்டுகளில் இந்த குட்டைகளில் மீன் வளர்க்க வாய்ப்பு இல்லை.எனவே இந்த குட்டைகளை தரைமட்டத்திலிருந்து 5 மீட்டர் ஆழத்திற்காவது பள்ளம் தோண்டி, அமைக்க வேண்டும். அப்போது நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பும் உள்ளது. மேலும் எளிய வழியில், மழைநீர் செல்லும் வரத்து கால்வாய்களை, புதிதாக அமைக்கப்படும் பண்ணை குட்டைகளுடன் இணைப்பு ஏற்படுத்த வேண்டும். இதனால் மழைக் காலங்களில் போதுமான அளவு, தண்ணீர் வரத்து ஏற்பட்டு பண்ணை குட்டைகள் நிரம்ப வாய்ப்பு உள்ளது.

**மடப்பட்டு மாடுகள் சந்தை மந்தம்**

உளுந்தூர்பேட்டை: மடப்பட்டு வார சந்தையில் மாடுகள் வரத்துகுறைந்தது.
<உளுந்தூர்பேட்டை தாலுகா மடப்பட்டில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாட்டுச் சந்தை நடக்கிறது. கோமாரி நோய் தாக்குதல் எதிரொலியாக சந்தைகளுக்கு மாடுகள் வரத்து மிகவும் குறைந்துள்ளது.உளுந்தூர்பேட்டை வாரசந்தைக்கு வழக்கமாக 300 மாடுகள் வரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. நேற்று நடந்த சந்தையில் 70 மாடுகள் மட்டுமே விற்பனைக்கு வந்தன. விலையும் படிப்படியாக குறைந்துவிட்டதால் மாடுகள் விற்பனை நேற்று மந்தமாகவே காணப்பட்டது.

**தொடர் மழையால் கத்தரி பாதிப்புகண்டமங்கலம் விவசாயிகள் அவதி**

கண்டமங்கலம்: கண்டமங்கலம் பகுதியில் தொடர் மழையால் கத்தரி சாகுபடி செய்த விவசாயிகள் பாதித்துள்ளனர்.கண்டமங்கலம் பகுதியில் தோட்டப்பயிரான கத்தரி (நாட்டு ரகம்) சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பிடாரிப்பட்டு, வாதானூர், பி.எஸ்.பாளையம், கலித்திரம்பட்டு, முட்ராம்பட்டு, கொடுக்கூர், திருமங்கலம், சித்தலம்பட்டு பகுதிகளில் விளையும் கத்தரி காய்களை புதுச்சேரி வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். தற்போது இப்பகுதியில் 1 ஒரு கிலோ கத்தரி 12 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

பண்ருட்டி மார்க்கெட்கண்டமங்கலம் தெற்கு பகுதியில் உள்ள கொங்கம்பட்டு, ராம்பாக்கம், சொரப்பூர், கலிஞ்சிக் குப்பம், சொர்ணாவூர், நல்லப்பரெட்டிப்பாளையம், அந்தராசிபாளையம், பேரீச்சம்பாக்கம் பகுதிகளில் கத்தரி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அறுவடை செய்த காய்களை பண்ருட்டி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.

இந்த ஆண்டு அதிகபட்சமாக 1 கிலோ 25 ரூபாய்க்கு விற்ற காய்கள், கிலோ 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.விவசாயிகள் பாதிப்பு இந்த ஆண்டு பருவநிலை மாற்றத்தாலும், தொடர் மழையாலும் கத்தரி செடிகளில் பூக்கள் உதிர்ந்து காய்ப்பு குறைந்ததோடு, புழுக்களின் தாக்கத்தால் சொத்தைக் காய்கள் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

**தோட்டத்தில் விளைந்த 25 கிலோ பூசணிக்காய்**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, விவசாயி ஒருவரின் தோட்டத்தில், 25 கிலோ எடை கொண்ட பூசணிக் காய்கள் காய்த்து வருவதால், பொதுமக்கள் வியப்புடன் பார்த்துச் செல்கின்றனர்.

ஆத்தூர் அருகே, தாண்டவராயபுரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி சுப்ராயன். அவர், தனது விவசாய நிலத்தின் ஒரு பகுதியில், பூசணி செடி விதை நடவு செய்தார். அந்த செடிகளில், தற்போது, "ராட்சத' பூசணிக் காய்கள், காய்த்து வருகிறது.

இதில், 25 கிலோ மற்றும், 10 கிலோ எடை கொண்ட இரண்டு பூசணிக் காய்களை, ஆத்தூர் உடையார்பாளையத்தில் உள்ள, ஆனந்தம் பழமுதிர்ச் சோலையில்,

விவசாயி சுப்ராயன், விற்பனை செய்தார். "ராட்சத' பூசணிக் காய்களை, ஆத்தூர் நகர் பகுதி மக்கள், வியப்புடன் பார்த்துச் செல்கின்றனர்.

விவசாயி சுப்ராயன் கூறியதாவது:

பூசணிக் காய்கள், இரண்டு கிலோ முதல், 10 கிலோ வரை விளையும். ஆனால், எங்களது தோட்டத்தில் உள்ள செடிகளில், 10 முதல், 25 கிலோ எடை அளவில், 30க்கும் மேற்பட்ட பூசணிக் காய்கள் விளைந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கான பயிர்க்கடன் அளவை நிர்ணயிக்க ஆலோசனை**

சேலம்: சேலம் மாவட்டத்தில், விவசாயிகளுக்கான பயிர்க்கடன் அளவை நிர்ணயிப்பதற்கான தொழில் நுட்பக்குழு கூட்டம் நடந்தது.

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும், பயிற்சி செய்வதற்கு தேவையான பயிர்க்கடன்கள், கிராமப்புறங்களில் செயல்படும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வழங்கப்படுகிறது.

சேலம், நாமக்கல் மாவட்டத்தில், 372 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் எட்டு மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு பயிர்க்கடன் வழங்க தேவையான நிதியுதவியை, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செய்து வருகிறது.

வரும், 2014 - 15ம் ஆண்டில், விவசாயிகளுக்கு இவ்வகை பயிர் கடன்கள் வழங்க ஏக்கர் ஒன்றுக்கு தேவையான கடன் அளவை நிர்ணயம் செய்வதற்கான மாவட்ட தொழில் நுட்பக்குழு கூட்டம், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அலுவலகத்தில் நடந்தது.

வங்கித் தலைவர் இளங்கோவன் கூறியதாவது:

அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான பயிர்க்கடன்களை, கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்க வேண்டும், என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. நடப்பு ஆண்டில், சேலம், நாமக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு, மத்திய கூட்டுறவு வங்கி மூலம், 440 கோடி ரூபாய் கடன் வழங்க முடிவு செய்யப்பட்டது. இத்தொகையில், இது வரை, 303 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியிருக்க வேண்டும். ஆனால், 336 கோடி ரூபாய் பயிர்கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2014 - 15ம் ஆண்டில்,

விவசாயிகளுக்கு தேவையான பயிர்கடன்களை, தொய்வின்றி வழங்கவும், பயிருக்கு தேவையான கடன் அளவை நிர்ணயம் செய்வதற்காகவும் இக்கூட்டம் நடத்தப்பட்டது. குறிப்பாக, ஏக்கர் ஒன்றுக்கு நெல் பயிருக்கு, 20 ஆயிரம் ரூபாய், வாழை பயிரிட, 37 ஆயிரம், கரும்பு, மஞ்சள் பயிருக்கு, 46 ஆயிரம் என கடன் அளவு நிர்ணயம் செய்யப்பட்டு, மாநில அளவிலான தொழில் நுட்பக்குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இணைப்பதிவாளர் சீனிவாசன், வங்கி மேலாண் இயக்குனர் கரிகாலன், மாநில கூட்டுறவு வங்கி முதன்மை மேலாளர் பாஸ்கர் மற்றும் இதர வரி நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

**மகசூலை அதிகரிக்க உயிரியல் பயிர் மருந்து உயிர் உரம் தேவை: வேளாண் உதவி இயக்குனர்**

மோகனூர்: "உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள் மற்றும் விளக்குப்பொறிகளை பயன்படுத்தி, மகசூலை அதிகரித்து பயன்பெறலாம்' என, மோகனூர் உதவி இயக்குனர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

உயிரியல் நோய் கட்டுப்பாட்டு மருந்துகளான டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் காரணிகளை, அரிசி கஞ்சியுடன் கலந்து, விதை நேர்த்தி செய்து, 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி, விதைப்பதன் மூலமோ அல்லது இயற்கை உரங்களுடன் கலந்து, ஒரு வாரம் வைத்திருந்து, மண்ணில் இடுவதன் மூலமோ, மண் மூலம் வேர்களுக்கு பரவும் நோய்களை கட்டுப்படுத்தி, வேர் வளர்ச்சி மற்றும் பயிர் வளர்ச்சியை துரிதப்படுத்தலாம்.

மேலும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லத்தை, தொழுஉரத்துடன் கலந்து இடுவதால், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, பயிருக்கு அளிக்கும். பயிருக்கு வளர்ச்சி ஊக்கிகளாகவும், நோய் மற்றும் வறட்சி எதிர்ப்பு தன்மையையும் அதிகரிக்கின்றன. பாஸ்போபேக்டீரியா உயிர் உரம் இடுவதன் மூலம், மண்ணில் நீரில் கரையாமல் உள்ள மணிச்சத்தை கரைத்து, பயிருக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறது.

ரைசோபியம் உயிர் உரத்தை, நிலக்கடலை பயிருக்கு இடுவதன் மூலம், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, வேர் முடிச்சிகளாக்கி, பயிரின் வளர்ச்சியையும், நிலக்கடலை பருப்பின் தரம் மற்றும் அளவையும் அதிகரிக்கிறது. மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றாக்குறையை போக்க, கரும்பு மற்றும் நெற்பயிர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட நுண்ணூட்ட கலவை உரங்களை பயன்படுத்தி, மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர்களில், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விளக்குப்பொறிகள், 33 சதவீதம் மானியத்துடன் உள்ளன. இவ்விளக்குப் பொறிகள், இரவு நேரங்களில், இளம் அந்துப்பூச்சிகளை கவர்ந்திழுத்து, மகசூல் சேதத்தை குறைக்கின்றன. உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள் மற்றும் விளக்குப்பொறிகள் அனைத்தும், மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் உள்ளது. விவசாயிகள் அவற்றை வாங்கி பயன்படுத்தி, மகசூலை அதிகரித்து பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**முட்டை விலை 30 காசு வரை உயர்வு நாமக்கல் மண்டலம் மவுனம்**

நாமக்கல்: முட்டை கொள்முதல் விலை, நாமக்கல் முட்டை மண்டலம் தவிர, மற்ற மண்டலங்களில், 30 காசுகள் வரை உயர்ந்துள்ள நிலையில், பண்ணையாளர்கள் எதிர்ப்பால், விலை உயர்த்த முடியாமல், நாமக்கல், "நிக்' (தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு) மவுனமாக உள்ளது.

வடமாநிலங்களில், கடுங்குளிர் வீசுவதால், முட்டையின் நுகர்வு அதிகரித்துள்ளது. அதனால், நாமக்கல், "நிக்' தவிர, மற்ற வடமாநில முட்டை மண்டலங்கள், ஏழு நாட்களுக்குள், அதிகபட்சமாக, 30 காசுகள் வரை, விலையை உயர்த்தியது. கடந்த டிசம்பர், 9ம் தேதி நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையில் இருந்து, நேற்றைய கொள்முதல் விலை வரை, நாமக்கல் "நிக்', 375 காசுகள் என்ற நிலையை பின்பற்றி வருகிறது. ஆனால், மற்ற முட்டை மண்டலங்கள், மக்கள் நுகர்வுக்கு ஏற்றவாறு, விலையை உயர்த்தி வருகின்றன.

அதன்படி, நேற்றைய மற்றும் கடந்த, 9ம் தேதி நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலை (அடைப்புக் குறிக்குள்) நிலவரம் வருமாறு:

நாமக்கல், 375 காசு (375), பர்வாலா, 404 காசு (380), போபால், 410 காசு (400), புதுடில்லி, 421 காசு (405), கோராக்பூர், 443 காசு (419), இண்டூர், 410 காசு (390), கோல்கத்தா, 430 காசு (402), லூதியானா, 402 காசு (387), நாக்பூர், 388 காசு (365), நவாப்பூர், 400 காசு (370), பாட்னா, 438 காசு (414), பஞ்சாப், 402 காசு (387), ராய்பூர், 404 காசு (378) என, அதிகபட்சமாக, 30 காசுகள் வரை உயர்ந்துள்ளது. மற்ற மண்டலங்களின் முட்டை விலையில் ஏற்ற, இறக்கத்தை கொண்டே, நாமக்கல், "நிக்' கொள்முதல் விலையை நிர்ணயித்து வந்தது. ஆனால், சில பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள், நாமக்கல், "நிக்' நிர்ணயிக்கும் பண்ணை மற்றும் கொள்முதல் விலையை பின்பற்றாததால், பிரச்னை இருந்து வருகிறது. "மற்ற மண்டலங்களில் விலை உயர்த்துவது போல், நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்த வேண்டாம்' என, பண்ணையாளர்கள், "நிக்' நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதால், தற்போது, விலை உயர்த்த முடியாத நிலை உள்ளது. அதனால், தமிழகம் மற்றும் கேரளாவில், கடந்த, டிசம்பர், 9ம் தேதியில் இருந்து, நேற்று வரை, முட்டை கொள்முதல் விலை, 375 காசுகள் என்ற நிலையே நீடிக்கிறது.

### பால் உற்பத்தியாளருக்கு ஊக்கத்தொகை ஒரு வாரத்தில் ரூ.17 கோடி வழங்க முடிவு

நாமக்கல்: ""ஏற்காடு தேர்தல் முன்னிட்டு, சேலம் ஒன்றியத்துக்கு உட்பட்ட பால் உற்பத்தியாளரின் ஊக்கத்தொகை நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், வரும் வாரத்தில், 17 கோடி ரூபாய் வழங்கப்படும்,'' என, சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய சேர்மன் சின்னசாமி தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள, 17 மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களில் இருந்து, ஒரு நாளுக்கு, 1.82 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம், கால்நடை வளர்ப்போரிடம், பால் கொள்முதல் செய்யப்பட்டு, மக்களுக்கு சப்ளை செய்யப்படுகிறது.

பால் உற்பத்தியை பெருக்க, கால்நடைக்கு தீவனம், செயற்கை கருவூட்டல், காப்பீடு வசதி, கடன் வசதி, தாது உப்பு மற்றும் பசும்புல் வழங்கல் ஆகிய வசதியை, பால்வளத் துறை செய்கிறது. மேலும், அதிக பால் உற்பத்தி செய்யும்

கூட்டுறவு ஒன்றியங்களுக்கு, ஆண்டு தோறும், ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர். இரு மாவட்டங்களிலும் உள்ள, 1,298 கூட்டுறவு சங்கங்கள் மூலம், நாளொன்றுக்கு, 4.75 லட்சம் லிட்டர் வரை, பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

சங்கத்தில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள், உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த தீபாவளிக்கு வழங்க வேண்டிய ஊக்கத்தொகை, ஏற்காடு இடைத்தேர்தல் நடந்ததால், நிறுத்தி வைக்கப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள், சேலம் மாவட்டத்தில் இருந்தாலும், நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கும், ஊக்கத்தொகை வழங்காமல், நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் முடிந்து விட்டதால், சங்க உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டிய ஊக்கத்தொகை குறித்த பட்டியலை, அதிகாரிகள் தயார் செய்து வருகின்றனர். வரும், ஒரு வாரத்துக்குள், உற்பத்தியாளர்களுக்கு, ஊக்கத்தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய சேர்மன் சின்னசாமி கூறியதாவது:

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு, அரசின் திட்டங்கள், சேலம் ஒன்றியம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. கடந்த தீபாவளிக்கு கொடுக்க வேண்டிய ஊக்கத்தொகை, ஏற்காடு இடைத் தேர்தலால் நிறுத்தி வைக்கப்பட்டது.

ஒரு லிட்டர் பாலுக்கு, 60 காசு ஊக்கத்தொகை வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளதால், அதற்காக, 17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும், ஒரு வாரத்தில், சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஊக்கத்தொகைகள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளின் இறைச்சி விற்பனை தடுக்க கோரிக்கை**

கிருஷ்ணகிரி: கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளை அறுத்து, இறைச்சி விற்பனை செய்வதை தடுக்க பொதுநல ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த, ஒரு மாத காலமாக கால்நடைகளை கோமாரி நோய் தாக்கி ஏராளமான கால்நடைகள் இறந்து வருகிறது. கோமாரி நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் மாடுகள் முதலில் வாயில் நுரை தள்ளி எழுந்திருக்க முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாறு உள்ள மாடுகளை கோமாரி நோய் தாக்கியுள்ளது என்பதை விவசாயிகள் எளிதாக புரிந்து கொள்கின்றனர். இவ்வாறு நோய் தாக்கிய பசுமாடுகளுக்கு உடனடியாக தடுப்பூசி போடுவதை கால்நடை வளர்ப்போர் செய்வதில்லை.

மாறாக நோய் தாக்கிய மாடுகளை அருகில் உள்ள நகர்புறங்களில் மாட்டு இறைச்சி வியாபாரம் செய்வோரிடம் வந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலை உள்ளது. இதனை குறைந்த விலைக்கு வாங்கும் மாட்டு இறைச்சி விற்பனையாளர்கள், ஒரு கிலோ இறைச்சி, 120 ரூபாய் என்ற அளவில் விற்பனை செய்து கொள்ளை லாபம் பார்க்கின்றனர்.

பொதுவாக எப்போதுமே நகர்புறங்களில் இறைச்சி கூடங்களில் அறுக்கும் ஆடுகளை நகராட்சி சுகாதார அலுவலர்கள் சோதனை செய்து அந்த ஆடுகள் எவ்வித நோய் தாக்குதலுக்குக்கும் உள்ளாகவில்லை என்று உறுதி செய்து ஆட்டுக்கு முத்திரை பதித்த பிறகு, இறைச்சியை விற்பனை செய்ய வேண்டும் என்ற விதிமுறை உள்ளது.

இந்நிலையில், கோமாரி நோய் தாக்கி மாட்டின் இறைச்சியை சாப்பிட்டால் மனிதனுக்கும் பல்வேறு விதமான நோய்கள் வர வாய்ப்புள்ளது என்ற நிலையில் கோமாரி நோய் தாக்கிய மாடுகளை இறைச்சிக்காக அறுப்பதை நகராட்சி சுகாதார துறையினர் வேடிக்கை பார்த்து வருகின்றனர்.

கிருஷ்ணகிரி பழையபேட்டை பகுதியில், 20க்கும் மேற்பட்ட மாட்டிறைச்சி கடைகள் உள்ளது. இக்கடைகளுக்கு கோமாரி நோய் தாக்கி இறக்கும் தருவாயில் உள்ள மாடுகளை, கிராம பகுதியில் உள்ள வியாபாரிகள் மிக மிக குறைந்த

விலைக்கு வாங்கி வந்து கிருஷ்ணகிரியில் உள்ள வியாபாரிகளுக்கு குறிப்பிட்ட அளவு லாபம் வைத்து விற்பனை செய்கின்றனர். இதனை உடனடியாக அறுக்கும் வியாபாரிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்து அதிக லாபம் பார்க்கின்றனர். மாட்டிறைச்சி பிரியர்கள் வழக்கம் போல் கடைக்கு வந்து இறைச்சியை வாங்கி செல்கின்றனர்.

கோமாரி நோய் தாக்கி இறக்கும் தருவாயில் உள்ள மாடுகளின் இறைச்சியை சாப்பிடும் பொதுமக்களுக்கு பல்வேறு விதமான உடல் உபாதைகள் ஏற்படுகிறது. இதனை நகராட்சி நிர்வா சுகாதார துறையினர் ஆய்வு செய்து கோமாரி நோய் தாக்கிய மாடுகளை அறுத்து இறைச்சி விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோமாரி நோய் தாக்கி இறக்கும் அல்லது இறக்கும் தருவாயில் உள்ள மாடுகளை குழி தோண்டி புதைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளதாகவும் இதனை மீறி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல இடங்களில் கோமாரி நோய் தாக்கி இறக்கும் கால்நடைகளை விற்பனை செய்யப்படுவதாகவும் கால்நடை பராமரிப்பு துறையினர் தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

வெள்ளகோவில்: வெள்ளகோவில் அருகே மேட்டுப்பாளையம் கால்நடை மருந்தக வளாகத்தில், நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் (பாலாறு உபவடி நீர்), விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

விவசாயிகளுக்கு, வெள்ளாடு, செம்மறி ஆடு, கலப்பின பசுக்கள், பராமரிப்பு நோய் தடுப்பு முறைகள் மற்றும் பசுந்தீவன வளர்ப்பு முறைகளும், அதன் பயன் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விரிவாக விளக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் தமிழ்செல்வன், தனபதி, குமார், பிரியா ஆகியோர், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். குறிப்பாக சிந்து, பசுமாடுகள் மற்றும் கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய் குறித்தும், வராமல் தடுக்கும் முறை குறித்தும், ஆண்டுக்கு இரண்டு முறை, எஃப்.எம்.டி., கோமாரி தடுப்பூசி போட்டுக்கொள்வது அவசியம் என்றனர்.

தடுப்பூசி போட்டு கொண்டால், சினையுற்ற மாடுகளுக்கோ, கறவை

மாடுகளுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது, என விளக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் அவைரும், தங்கள் கால்நடைகளுக்கு ஆண்டுக்கு இருமுறை கோமாரி தடுப்பூசி போட்டுக்கொள்வோம், என உறுதியளித்தனர்.

**இயற்கை உரத்தை பயன்படுத்த விழிப்புணர்வுதேயிலை ஏஜன்ட்கள் சங்க கூட்டத்தில் முடிவு**

கோத்தகிரி:"நீலகிரியில் வேதி உரங்களை தவிர்த்து, இயற்கை உரத்திற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்' என, தேயிலை ஏஜன்ட்கள் சங்கம் முடிவெடுத்துள்ளது.கோத்தகிரியில், நீலகிரி பசுந்தேயிலை ஏஜன்ட்கள் நலச் சங்க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. சங்க ஆலோசகர் பாபு வரவேற்றார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:விவசாயிகள் நலன் கருதி, தேயிலை வாரியம் மற்றும் உபாசி மூலம் கிடைக்கும் மானியம் உள்ளிட்ட சலுகைகளை விவசாயிகளுக்கு பெற்றுத் தருவது;தேயிலைத் தோட்டங்கள் வர்த்தக ரீதியாக சமவெளி பகுதியை சேர்ந்தவர்களுக்கு விற்கப்படுவதை தவிர்க்கும் வகையில், சங்கம் மூலம், விழிப்புணர்வு ஏற்படுத்துவது;கூடுமானவரை, தேயிலை தோட்டங்களில் வேதி உரங்களை தவிர்த்து, இயற்கை உரங்களை பயன்படுத்த விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்பன உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இதில், சங்க தலைவர் துரை தலைமை வகித்தார். துணைத் தலைவர் ராஜு, செயலாளர் ரவிக்குமார் மற்றும் துணை செயலாளர் மணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க செயற்குழு உறுப்பினர்கள் ராஜூ, சிங்கு, ராஜேஷ் மற்றும் தேவன் உட்பட பலர் பங்கேற்றனர்.பொருளாளர் நடராஜ் நன்றி கூறினார்.

**கோமாரிக்கு 2 மாடுகள் பலி**

தேவதானப்பட்டி:சில்வார்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட நல்லகருப்பன்பட்டியை சேர்ந்தவர் கோபால். இவருக்கு சொந்தமான மாடு ஒன்று நேற்று முன்தினம் இறந்தது.  இதனை இவர்கள் கால்நடைத்துறைக்கு தகவல் தெரிவிக்காமல் புதைத்து விட்டனர். அதேவீட்டில் நேற்றும் ஒரு மாடு இறந்தது.

கால்நடைத்துறையினர் ஆய்வு செய்ததில் மாட்டிற்கு கோமாரி நோய் இருந்தது தெரியவந்தது. இதனை தொடர்ந்து சுற்றுப்பகுதியில் உள்ள மாடுகளுக்கு நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பயறுகளை பாதுகாக்க "டிப்ஸ்'**

விருதுநகர்:""விருதுநகர் மாவட்ட விவசாயிகள், உணவு மற்றும் விற்பனைக்காக சேமித்து வைக்கப்படும் பயறு வகைகளில், விஷ மருந்து கலக்க கூடாது. விதைகளை, வெயிலில் காய வைத்து, ஒரு டம்ளர் விதைக்கு 5 மில்லி நல்லெண்ணெய் கலந்து, நிழலில் உலர வைத்து சேமிக்கலாம் ,"என, வேளாண் துணை இயக்குனர் முத்து முனியாண்டி தெரிவித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: மாவட்டத்தில், மானவாரி பகுதியில் விதைக்கப்பட்ட உளுந்து, தட்டை பயறு ,தற்போது அறுவடை செய்யும் நிலையில் உள்ளது. பயறில் 85 சதவீதம் பருப்பு அளவு இருந்தால், கூடுதல் விலைக்கு விற்கலாம். பயறு வகை காய்கள் நெற்றுகளாக மாறி, இலைகள் பழுத்து உதிர ஆரம்பிக்கும் போது, அறுவடை செய்ய வேண்டும். செடியிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட நெற்றுகளை, காய வைத்து விதைகளை பிரித்து எடுத்து, சுத்தம் செய்ய வேண்டும். இதில் கலந்துள்ள கல், மண், தூசி, சருகுகள், முதிராத விதைகள், பூச்சி நோய் தாக்கிய விதைகள், உடைந்த வதைகளை, தனியாக நீக்கி விட வேண்டும்.

விதைகளில் 12 சதவீத ஈரப்பதம் இருக்க வேண்டும். உணவு மற்றும் விற்பனைக்காக சேமித்து வைக்கப்படும் பயறு வகைகளில், விஷ மருந்து கலக்க கூடாது. விதைகளை வெயிலில் காய வைத்து, ஒரு டம்ளர் விதைக்கு 5 மில்லி நல்லெண்ணெய் கலந்து நிழலில் உலர வைத்து சேமிக்கலாம். 100 கிலோ பயறுக்கு ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை கலந்து வைத்தால், ஏழு மாதங்கள் வரை பூச்சிகள் தாக்குதல் இருக்காது. சேமித்து வைக்கப்படும் கிடங்குகளில், சதுர அடிக்கு 100 மி.லி., "டைகுலோர்' பூச்சி மருந்து தெளித்தால், பூச்சிகளால் சேதமின்றி பாதுகாக்கலாம், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சூறாவளி காற்றில் கரும்புகள் சேதம் மேலூரில் விவசாயிகள் வேதனை

மேலூர், : மேலூரில் நேற்றுமுன்தினம் வீசிய சூறாவளி காற்றில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கரும்புகள் சாய்ந்து விழுந்தன. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டம், மேலூர் மற்றும் சுற்றி உள்ள நாவினிப்பட்டி, எட்டிமங்கலம், தனியாமங்கலம், சருகுவலையபட்டி உள்ளிட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் கரும்பு, வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் கரும்புகள் தமிழகம் மட்டுமின்றி, வட மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. நேற்றுமுன்தினம் இரவு மேலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் திடீரென லேசான மழையுடன், பலத்த சூறாவளி காற்று வீசியது. இதில் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த கரும்புகள் அனைத்தும் அடியோடு சாய்ந்து விழுந்தன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

சாலைக்கிபட்டியை சேர்ந்த விவசாயி லட்சுமணகுமார் கூறுகையில், ''கரும்பு நட்டு பலன் கொடுக்க 9 மாதங்களாகும். ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்து கரும்பு பயிரிட்டோம். பொங்கல் பண்டி கையை முன்னிட்டு கரும்புகள் வெட்டுவதற்கு தயார் நிலையில் இருந்தன. திடீரென வீசிய சூறாவளி காற்றில் கரும்புகள் அனைத்தும் அடியோடு சாய்ந்து விட்டன. இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்துள்ள எங்களுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்,'' என்றார்.

மதுரையை சேர்ந்த கரும்பு வியாபாரி செல்வக்குமர் கூறுகையில், ''மேலூர் பகுதி கரும்புகளுக்கு சுவை அதிகம். அதனால் விவசாயிகளிடம் முன்னதாகவே கரும்பை விலை பேசி அட்வான்ஸ் கொடுத்துள்ளோம். சூறாவளி காற்றில் கரும்புகள் சேதமடைந்ததால், எங்கள் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது,'' என்றனர்.

**ஆடு வளர்க்க 17ம் தேதி பயிற்சி**

திருப்பூர், : ஆடு வளர்ப்பது குறித்த இலவச பயிற்சி திருப்பூரில் 17ம் தேதி அளிக்கப்பட உள்ளது. இதுதொடர்பாக கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை: கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் திருப்பூரில் வருகிற 17ம் தேதி ஆடு வளர்ப்பு குறித்தும், 18ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்தும் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. திருப்பூர் பழைய பஸ் ஸ்டாண்ட் எதிரிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடக்க உள்ள இப்பயிற்சியில் திருப்பூர் மற்றும் சுற்றுப்புற மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம். நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் வெள்ளாடு வளர்ப்பில் உள்ள விஞ்ஞான முறைகள், வர்த்தக வாய்ப்புகள் குறித்து இப்பயிற்சியில் தெரிவிக்கப்படும். மேலும், விவரங்களுக்கு 0421-2248524 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**விடிய விடிய மழை நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு**

ஆட்டையாம்பட்டி, : வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த "மாதி" புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியதால் சேலம் மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு முதல் பரவலாக மழை பெய்தது. இதனால், நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று

காலை 8 மணி வரை நல்ல மழை பெய்தது. இதையடுத்து, வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. திடீரென மாலை 5.30 மணி முதல் இரவு வரை விட்டு விட்டு மழை பெய்தது. இதனால், காலை வேளையில் பள்ளி, கல்லூரிக்கு சென்ற மாணவ, மாணவிகள் பாதிப்பிற்குள்ளாகினர். மேலும், மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பியவர்களும் கடும் அவதிக்குள்ளாகினர்.

வாழப்பாடி வட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் பரவலாக மழை பெய் தது. வாழப்பாடி, காரிப்பட்டி, பேளூர், அயோத்தியாப்பட்டணம் பகுதிகளில் பெய்த தொடர் மழையால் விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியது. இதேபோல் நங்கவள்ளி, வனவாசி, பெரிய சோரகை, சாணாரப்பட்டி, வீரக்கல் உள்ளிட்ட இடங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று மதியம் வரை விட்டு விட்டு மழை பெய்தது. நேற்றிரவு தூரல் மழை பெய்தது. ஜலகண்டாபுரம், ஆவடத்தூர், சூரப்பள்ளி, கோரமங்கலம் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

தம்மம்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு பெய்த மழை நேற்று பகல் முழுவதும் நீடித்தது. தொடர் மழையால் சுவேத நதியில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் உள்ளிட்ட இடங்களில் நேற்று முன்தினம் இரவு முதலே கனத்த மழை பெய்தது. பலத்த மழையால் தலைவாசல் பகுதியில் வாய்க்கால்களில் தண்ணீர் பெருக்கெடுத்துள்ளது.

இடைப்பாடி, பூலாம் பட்டி, தேவூர், கொங்கணாபுரம், இளம்பிள்ளை, இடங்கணசாலை, சித்தர் கோயில் உள்ளிட்ட பகுதியிலும் நேற்று காலை முதல் மதியம் வரை லேசான மழை பெய்தது. ஓமலூர் வட்டத்தில் ஓமலூர், காடையாம்பட்டி, தீவட்டிப்பட்டி, கருப்பூர், கோட்டை மாரியம்மன் கோயில் ஊராட்சி, புலியம்பட்டி, ஆட்டுக்காரனூர், கஞ்சநாயக்கன்பட்டி, கரும்பாலை, நாலுகால் பாலம் உள்ளிட்ட இடங்களிலும் பரவலாக மழை பெய்தது.

சங்ககிரி பகுதியிலும் பரவலாக மழை பெய்தது. சங்ககிரி, சங்ககிரி ஆர்எஸ்,

சங்ககிரி மேற்கு, மகுடஞ்சாவடி, காகாபாளையம் உள் ளிட்ட இடங்களில் பெய்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சுற்றுலா தலமான ஏற்காட் டில் நேற்று முன்தினம் முதல் கடும் பனிமூட்டத்துடன் அவ்வப்போது சாரல் மழை பெய்தது. இதனால், ஏற்காடு வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**கொங்கணாபுரத்தில் இன்று பருத்தி ஏலம்**

இடைப்பாடி, : கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தி மற்றும் நிலக்கடலை ஏலம் நடைபெறுவது வழக்கம். இந்நிலையில், சீசன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதால் நிலக்கடலை வரத்து சரிந்தது. இதனால், கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தின்போது 30 மூட்டைகளாக குறைந்தது. இதையடுத்து, நேற்று நடைபெற இருந்த ஏலம் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், ஏலத்திற்கு பருத்தி வரத்து அதிகரித்த வண்ணம் உள்ளது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தின்போது 4800 மூட்டை பருத்தி ரூ.90 லட்சத்திற்கு விற்பனையானது. இன்று நடைபெறும் ஏலத்தின்போது பருத்தி மூட்டைகளின் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கடல் சீற்றத்தால் தொழில் பாதிப்புமீனவர்களுக்கு பீ5 ஆயிரம் நிவாரணம் வழங்க கோரிக்கை**

புதுச்சேரி, : ஏம்பலம் தொகுதி திமுக செயலாளர் ஏம்பலம் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கை: வங்கக் கடலில் கடந்த அக்டோபர் மாதம் முதல் தொடர்ந்து உருவான பாலின், ஹெலன், லெஹர் புயல்கள் மற்றும் கடல் சீற்றத்தின் காரணமாக துறைமுகத்தில் தொடர்ந்து புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கையும்

விடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் புதுவை மாநிலத்தில் உள்ள மீனவ பெருமக்கள் தங்கள் வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடி தொழிலுக்கு செல்ல இயலவிலை. மணவெளி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நல்லவாடு, புதுக்குப்பம், சின்னவீராம்பட்டினம், வீராம்பட்டினம் உள்ளிட்ட மீனவ பகுதிகளில் மீனவ குடும்பங்கள் கடந்த 3 மாத காலமாக போதிய வருமானம் இல்லாமல் வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது ஏற்பட்ட புயல் சின்னங்களால் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வறுமையில் வாழ்ந்து வரும் மீனவ மக்களுக்கு முதல்வர் புயல் நிவாரண உதவியாக ரூ.5 ஆயிரம் மற்றும் 25 கிலோ அரிசி வழங்க வேண்டும். கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு உரிய நிவாரண தொகை வழங்க முதல்வர் நடவடிக்கை எடுத்து அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**மழையளவு குறைந்ததால் மக்காச்சோளம் விளைச்சல் பாதிப்பு**

சத்தியமங்கலம், : சத்தியமங்க லத்தை அடுத்த தாளவாடி பகுதியில் மழையளவு குறைந்ததால் மக்காச்சோள விளைச்சல் குறைந்துள்ளது.

தாளவாடி மலைவட்டாரத்தில் உள்ள பெரும்பான்மையான விளைநிலங்களில் மானாவாரிப் பயிர்களான மரவள்ளிக்கிழங்கு, ராகி, மக்காச்சோளமும் கிணற்றுப்பாசனம் மூலம் உருளைக்கிழங்கு, கேரட், பீம்ஸ், பூண்டு, காலிபிளவர் மற்றும் முட்டைக்கோஸ் சாகுபடி செய்து வந்தனர்.

சென்ற ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் மானாவாரி நிலங்கள் தரிசாக கிடந்தன. அண்மையில் பெய்த பருவமழையால் தாளவாடி விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டதின் விளைவாக மக்காச்சோளம் பயிர் செய்ய ஆர்வம் காட்டினர். இதையடுத்து, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக நிலத்தில் ஈரப்பதம் பிடிப்பு உள்ளபோதே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மக்காச்சோளம் விதைத்தனர். தலமலை, மல்லன்குழி, கோடிபுரம், நெய்தாளபுரம், தொட்டபுரம், திகினாரை, நெய்தாளபுரம், சிக்கஹள்ளி உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 10000 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம்

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 3 மாதப்பயிரான மக்காச்சோளப் பயிர் தற்போது ஓரளவு வளர்ந்து கதிர் பிடித்துள்ளது. தற்போது மழை குறைந்துள்ளதால் கதிர்கள் முற்றாமல் பயிர்கள் வெயிலில் காய்ந்தன. இதனால் ஏக்கருக்கு 25 குவிண்டாலில் இருந்து 5 குவிண்டாலாக விளைச்சல் குறைந்துள்ளது.

ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் வரை செலவு செய்துள்ளதால் நஷ்டம் ஏற்படும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது மக்காச்சோளம் குவிண்டால் ரூ.950 முதல் 1100 வரை விற்பனையாகிறது. மழை குறைவால் ஏக்கருக்கு ரூ.5000 வரை நஷ்டம் ஏற்படுவதால் மக்காசோளத்தை அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

**மாவட்டத்தில் சாரல் மழை**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் நேற்று பகலில் சாரல் மழை பெய்ததால் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. மாவட்டத்தில் அதிகபட்சமாக சிவகிரியில் 40 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

வங்க கடலில் நிலைகொண்டுள்ள மாதி புயல் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகின்றது. ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் பரவலாக சாரல்மழை பெய்து வருகின்றது. பனிப்பொழிவு போல பெய்த சாரல்மழையானது நேற்று அதிகாலை சற்று கனமாக பெய்தது. சிவகிரி,சென் னிமலை, பெருந்துறை உள்ளிட்ட ஒரு சில இடங்களில் நல்ல மழை பெய்தது. மாவட்டத்தில் பெய்த ம¬ ழயளவு விபரம், கொடிவேரி 4மில்லிமீட்டர், கோபி, எலந்தைகுட்டை மேடு, கவுந்தப்பாடி,ஈரோடு உள்ளிட்ட இடங்களில் தலா 3 மில்லிமீட்டர் மழையும், பெருந்துறையில் 14 மில்லிமீட்டர், பவானி 2, புங்கம்பாடி, மொடக்குறிச்சியில் தலா 5மில்லிமீட்டர், அரச்சலூரில் 13, சென்னிமலையில் 16, சிவகிரியில் 40 மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது.

சாரல் மழையோடு குளிர்காற்று வீசியதால் சீதோஷ்ணநிலையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சென்ற நிதி ஆண்டில் 15.95 கோடி டன் காய்கறி உற்பத்தி**



கொல்கத்தா,

சென்ற நிதி ஆண்டில் (2012–13) 15.95 கோடி டன் காய்கறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது 2008–09–ஆம் ஆண்டில் 12.91 கோடி டன்னாக இருந்தது. தேசிய தோட்டக்கலை திட்டம் அமல்படுத்தப்பட்டதே காய்கறி உற்பத்தி அதிகரிப்பிற்கு காரணம் என தெரிய வந்துள்ளது.

18 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில், கடந்த 2005–06–ஆம் நிதி ஆண்டில் தேசிய தோட்டக்கலை திட்டம் அமல்படுத்தப்பட்டது. மற்ற மாநிலங்களில் வடகிழக்கு மற்றும் இமயமலைப் பகுதி மாநிலங்களுக்கான தோட்டக்கலைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இந்த இரு திட்டங்களின் கீழ் காய்கறி விதை உற்பத்தி, பாதுகாப்பான சாகுபடி, இயற்கை விவசாயம் உள்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. வடகிழக்கு மற்றும் இமயமலை சார்ந்த மாநிலங்களில் காய்கறி சாகுபடிக்கும் உதவி அளிக்கப்படுகிறது.

நம் நாட்டில் ஆண்டுக்கு 150 டன் காய்கறியும், 77 டன் பழங்களும் உற்பத்தி செய்யப்படுகிறது. அதே சமயம் குளிர்பதன கிடங்குகள் மற்றும் பதப்படுத்தும் பிரிவுகள் போதிய அளவிற்கு இல்லாததால் ஆண்டுக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள காய்கறி, பழங்கள் வீணாகின்றன. தற்போதைய மதிப்பீடுகளின்படி 2021–க்குள் இந்தியாவின் காய்கறி, பழங்கள் உற்பத்தி 37.70 கோடி டன்னை எட்ட உள்ளது.

**அரூர் கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை பணி**

அரூர் கோபாலபுரம் சுப் பிரமணிய சிவா கூட்டு றவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை செய்யும் பணியை அமைச்சர் பி.பழனியப்பன் தொடங்கி வைத்தார்.

சர்க்கரை ஆலை தர்மபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2013- 14-ம் ஆண்டுக்கான கரும்பு அரவை தொடக்க விழா நேற்று நடைபெற்றது. விழா வுக்கு கலெக்டர் விவேகானந் தன் தலைமை தாங்கினார். தலைவர் வளர்மதி முருகேசன், மாநில கூட்டுறவு சர்க்கரை ஆலை இணைய தலைவர் ஞானமூர்த்தி ஆகியோர் முன் னிலை வகித்தனர். ஆலையின் மேலாண்மை இயக்குனர் ரத்தினவேலு வரவேற்று பேசினார்.

விழாவில் தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் கலந்து கொண்டு கரும்பு அரவை பணியை தொடங்கி வைத்தார். இதில் அரூர் உதவி கலெக்டர் சந்திரசேகரன், ஒன்றியக்குழு தலைவர்கள் தென்னரசு, லலிதா குப்புசாமி, முருகன், துணை தலைவர் ராஜேந்திரன், அரூர் ஒன்றிய செயலாளர் முருகன், தொழிற்சங்க தலை வர் சின்னதுரை, ஆலையின் துணை தலைவர் பார்த்திபன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆலையின் அலுவலர் கள், பணியாளர்கள், விவசாயி கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

1.25 லட்சம் டன்

கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா சர்க்கரை ஆலையில் 2013-14-ம் ஆண்டு சுமார் 1.25 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. நடப்பு அரவை பருவத்திற்கு 10 ஆயிரத்து 154 ஏக்கர் கரும்பு பயிர் பதிவு செய்யப்பட்டுள் ளது. விவசாய நிலங்களில் இருந்து ஆலைக்கு பதிவு செய் யப்பட்ட கரும்புகளை சர்க் கரை ஆலைக்கு கொண்டு வர 78 லாரிகள், 86 டிராக்டர்கள், 57 டிப்பர்கள், 46 டயர் மாட்டு வண்டிகள் ஈடுபடுத்தப்பட உள்ளது. நடவு பருவத்திற்கு கரும்பு பயிரிடும் பணியை விவசாயிகள் தொடங்கி விட்டனர்.

தமிழக முதல்-அமைச்சர் அறிவித்துள்ள நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 27 நிழல் வலைக்கூடங்கள் அரசு மற் றும் ஆலை மானியம் வழங்கி யதன் மூலம் அமைக்கப்பட்டு இருந்தது. இதில் அதிக அளவு கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதேபோல நடப்பு பருவத்தில் புதியதாக 11 நிழல் வலைக்கூடங்கள் அமைக்கும்பணி தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வரும் ஆண்டில் கூடுதலாக கரும்பு பருநாற்று உற்பத்தி இருக்கும் என்று ஆலையின் மேலாண்மை இயக்குனர் ரத்தினவேலு தெரி வித்தார்.

**குண்டு மல்லிகைப் பூ விலை கிடு, கிடு உயர்வு 1 கிலோ ரூ.700 வரை விற்கிறது**



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடும் பனிப் பொழிவால் குண்டுமல்லிகை பூ உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பூ வரத்து குறைந்ததால் விலை கிடு, கிடு வென

உயர்ந்துள்ளது. நேற்று 1 கிலோ ரூ.700 வரையும், உள்ளூர் மார்க்கெட்டில் 1 முழம் மல்லிகை ரூ.30–க்கும் விற்றது.

<u>மல்லிகைப் பூ</u>

மாங்கனிக்கு பெயர் பெற்ற கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மனதை மயக்கும் குண்டு மல்லி, மல்லிகை, காக்கடம் பூ, செண்டு மல்லி பூ போன்ற பூக்கள் பரவலாக பயிர் செய்யப்படுகிறது. மல்லிக்கு பெயர் பெற்ற மதுரைக்கு அடுத்த படியாக மல்லிகை பூ உற்பத்தியில் கிருஷ்ணகிரி மாவட்டம் முன்னிலையில் உள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று படுகையான திம்மாபுரம், பெரியமுத்தூர், காவேரிப்பட்டணம், சந்தாபுரம், வேலம்பட்டி போன்ற பகுதிகளில் சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் மல்லிகைப்பூ பயிரிடப்பட்டுள்ளது. வருடம் முழுவதும் வருவாயை ஈட்டி தரும் மல்லிகை பூவிற்கு மார்க்கெட்டில் எப்போதும் நல்ல வரவேற்பு உண்டு. <u>பூ உற்பத்தி பாதிப்பு</u>

மல்லிகை பூவை பொறுத்த வரை மழை மற்றும் பனி காலங்களில் விளைச்சல் குறைவாகவும், வெயில் காலங்களில் விளைச்சல் அதிகமாகவும் இருக்கும். ஏப்ரல், முதல் செப்டம்பர் வரையிலான வெயில் அதிகம் உள்ள கோடை காலங்களில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 50 டன் மல்லிகைப் பூ பெங்களூருக்கு அனுப்பப்படும். இதே போல் பனி மற்றம் மழை தொடர்ச்சியாக பெய்யவும் அக்டோபர் மாதம் முதல் கடும் பனி பெய்யும் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மல்லிகை பூ விளைச்சல் கடுமையாக பதிக்கப்படுவது வழக்கம். தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பனிகாலம் தொடங்கியதால் கடும் பனிப் பொழிவு நிலவி வருகிறது. இதனால் குண்டு மல்லி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மல்லிகை செடியில் மொட்டும் வரும் போதே பனியால் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

## <u>விலை கிடு, கிடு உயர்வு</u>

இதனால் திம்மாபுரம், காவேரிப்பட்டணம் ஆகிய பகுதிகளில் இருந்து நாள் ஒன்றுக்கு 100 கிலோ மல்லிகைப் பூ கிடைப்பதே அரிதாக உள்ளது. மேலும் தற்போது திருமண சீசன் மற்றும் சபரிமலை சீசன் என்பதால் அனைத்து வகை பூக்களுக்கும் அதிக வரவேற்பு உள்ளது. இதனால் உள்ளூர் மார்க்கெட்டிலும், பெங்களூர் பூ மார்க் கெட்டிலும் மல்லிகை பூவிற்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மல்லிகைப் பூ விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பெங்களூர் மார்க்கெட்டில் அதிகபட்சமாக 1 கிலோ மல்லிகைப் பூ ரூ.700 வரை விற்றது. கிருஷ்ணகிரி, ஓசூர் போன்ற உள்ளூர் மார்க்கெட்டிலும் மல்லிகைக்கு நல்ல அதிக விலை கிடைத்தது வருகிறது. நேற்று கிருஷ்ணகிரியில் உள்ள பெரும்பாலான பூ கடைகளில் மல்லிகை பூ விற்பனைக்கே இல்லை. பூ இருந்த கடைகளில் 1 முழம் மல்லிகைப் பூ ரூ.30 வரை விற்றது. விளைச்சல் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளதால் மல்லிகையின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

## **கோவை நீலகிரி மாவட்டங்களில் விடிய விடிய மழை**



கோவை, வங்கக்கடலில் உருவான புயல் காரணமாக கோவை-நீலகிரி மாவட்டங்களில் விடிய விடிய மழை பெய்தது. நீலகிரி மாவட்டத்தில் நேற்று மாலை 5 மணி

அளவில் சாரல் மழை பெய்யத்தொடங்கியது. விடிய விடிய சாரல் மழை பெய்து கொண்டேயிருந்தது. இன்று காலையும் அடர்த்தியான மேகமூட்டம் காணப்பட்டது. விடிய விடிய பெய்த மழை காரணமாக கடுங் குளிர் வாட்டியது. கடந்த சில நாட்களாக நீலகிரி மாவட்டத்தில் உறைபனியின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் மலைகாய்கறிச் செடிகள் மற்றும் தேயிலைச் செடிகள் கருகின. அவற்றின் மகசூலும் பாதிக்கும் நிலை ஏற்பட்டௌ உள்ளது.

2-வது சீசனை அனுபவிக்க ஊட்டிக்கு தற்போது தேனிலவு தம்பதிகளும், சுற்றுலா பயணிகளும் அதிகம் வந்துள்ளனர். அடர்த்தியான மேகமூட்டம் காணப்படுவதால் அவர்கள் இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்க முடியாமல் சிரமப்பட்டனர்.

கோவையில் நேற்று மாலை 5 மணி அளவில் சாரல் மழை பெய்யத்தொடங்கியது. விடிய விடிய மழை தூறிக்கொண்டே இருந்தது. இன்று காலையும் தொடர்ந்து மழை பெய்து கொண்டேயிருக்கிறது. இடி தாக்கியதில் கோவை வடவள்ளியைச் சேர்ந்த கணவன்-மனைவியான வனராஜா, சித்ரா உடல் கருகியது. அவர்கள் சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்னர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**குன்னூர் காட்டேரி பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்வதற்காக பாத்திகள் அமைக்கும் பணி**



குன்னூர் அருகே காட்டேரி பூங்காவில் கோடை சீசனை முன்னிட்டு நிலத்தை தயார் செய்வதற்காக உரமிடும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்ட போது எடுத்த படம்.

குன்னூர் அருகே உள்ள காட்டேரி பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்வதற்காக பாத்திகள் அமைக்கும் பணி தற் போது தீவிரமாக நடை பெற்று வருகிறது.

சுற்றுலா பயணிகள்

நீலகிரி மாவட்டம் சுற்றுலா மாவட்டமாக இருப்பதால் சமவெளி பகுதியில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணி கள் வாகனங்கள் மூலம் குன் னூர் மேட்டுப்பாளையம் சாலை வழியாக ஊட்டிக்கு வருகிறார்கள். இதன் காரண மாக குன்னூர்- மேட்டுப் பாளையம் சாலை முக்கியத் துவம் வாய்ந்ததாக கருதப் படுகிறது.

சீசன் காலங்களில் சுற்றுலா பயணிகள் இரு சக்கர வாகனங் கள், கார் மற்றும் வேன்கள் மூலமாக நீலகிரி மாவட்டத் திற்கு வருகிறார்கள். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் மலைப்பாதையான குன்னூர்- மேட்டுப்பாளையம் சாலை யில் ஓய்வு எடுக்க விரும்பு கிறார்கள். மேலும், மலைப் பகுதியில் இருந்து பார்க்கும் போது சமவெளி பகுதி காட்சி கள் கண்ணுக்கு விருந்தாக அமைகின்றன.இதனால் சுற்றுலா பயணிகள் ஆங் காங்கே சாலையின் ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி இயற்கை காட்சிகளை கண்டு ரசித்து வருகிறார்கள்.

காட்டேரி பூங்கா

குன்னூர்- மேட்டுப் பாளை யம் சாலை மலைப்பாதையாக இருப்பதால் இந்த சாலை மிகவும் குறுகியதாக உள்ளது. இதனால் வாகன விபத்து ஏற் படும் அபாயம் இருந்து வந்தது. இதையடுத்து குன்னூர் ரன்னி மேடு பகுதியில் உள்ள அரசு விதைப் பண்ணை நிலத்தில் சுற்றுலா பயணிகளை கவர கடந்த 2011-ம் ஆண்டு தோட்டக்கலை துறை சார்பில் காட்டேரி பூங்கா அமைக்கப் பட்டது.இந்த பூங்காவில் கண்ணை கவரும் மலர்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்கள் அமைக்கப் பட்டன.

மேலும், வருகிற ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் கோடை சீசனுக்காக காட்டேரி பூங்காவில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்ய திட்ட மிடப்பட்டு உள்ளது.

பாத்திகள் அமைக்கும் பணி தீவிரம்

இதையடுத்து, காட்டேரி பூங்காவில் பாத்திகள் அமைக் கும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. மலர் செடிகள் நன்றாக வளருவதற்கு தேவையான இயற்கை உரங் கள் சமவெளி பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டு உள்ளது.

இந்த இயற்கை உரங்கள் பாத்திகளில் போடப்பட்டு விதைகள் தூவும் பணி விரை வில் தொடங்கும் என்று பூங்கா அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

## தஞ்சை அருகே சாலையில் நாற்றுநட்டு பெண்கள் போராட்டம்

தஞ்சாவூர், தஞ்சையை அடுத்த முன்னையம்பட்டி கிராமம் செல்வ விநாயகர் கோவில் தெருவில் 100–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கடந்த 35 ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். இவர்கள் வசிக்கும் இந்த பகுதியில் சாலை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி, தெரு மின்விளக்கு வசதி போன்றவை தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஊராட்சி மன்ற தலைவரிடம் மனு கொடுத்துள்ளனர்.

மேலும் மழைகாலங்களில் சாலையானது சேறும், சகதியாக காட்சி அளிக்கிறது. சாக்கடை நீர் சாலைகளில் ஓடி நோய் பரவும் அபாயம் உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஊராட்சி நிர்வாகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக அப்பகுதி பெண்கள் சாலையில் காணப்படும் சேற்றில் நாற்றுகளை நட்டு நூதன போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இந்த போராட்டத்திற்கு பின்னரும் சாலையை சீரமைக்கவில்லை என்றால் அடுத்தகட்டமாக சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட போவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## மேடி புயல் கரையை கடந்ததால் வேதாரண்யத்தில் கடல் சீற்றம் குறைந்தது திசைமாறிய 14 மீனவர்கள் கரை சேர்ந்தனர்

வேதாரண்யம், மேடிபுயல் கரையை கடந்ததால் வேதாரண்யத்தில் கடல் சீற்றம் குறைந்தது. மேலும் ராட்சத அலையில் சிக்கி திசைமாறிய 14 மீனவர்களள் கரை சேர்ந்தனர்.

<u>கடல் சீற்றம்</u>

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று 8.30 மணி வரை 9.மி.மீ மழையே பெய்தது. தலைஞாயிறில் 18.8.மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. இந்த நிலையில் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுபகுதி நேற்று மீண்டும் வலுபெற்றதால் கடல் சீற்றமாக இருந்தது. ஆனால் இதைபொருட்படுத்தாமல் கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை, வெள்ளப்பள்ளம் பகுதியிலிருந்த மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இதில் கோடியக்கரையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற தரங்கம்பாடியைச் சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரது படகில் எரிபொருள் இல்லாமல் காற்றால் திசைமாறி இலங்கை யாழ்பாணத்தில் கரை சேர்ந்ததாக கோவிந்தராசு மனைவி சரஸ்வதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>பாதிப்பு இல்லை</u>

இந்நிலையில் நேற்று முன்தினம் வேதாரண்யத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஆறுகாட்டுத்துறையை சேர்ந்த சத்யசீலன், ரமேஷ், பட்டாபிராமன், வெள்ளப்பள்ளத்தைச் சேர்ந்த சத்யராஜ் ஆகிய 4 பேரின் படகில் சென்ற 14 மீனவர்கள் காற்றில் சிக்கி கடல் சீற்றத்தாலும், எரிபொருள் பற்றாக்குறையாலும் திசைமாறி கடலில் தத்தளித்தனர். பின்னர் இந்த மீனவர்கள் சக மீனவர்கள் உதவியுடன் மதியம் கரைக்கு அழைத்து வரப்பட்டனர். தற்போது வானிலை மையம், மேடிப் புயல் வேதாரண்யம் அருகே கரையை கடந்ததாக அறிவித்து இருந்தது. இதனால் கடலில் சீற்றம் குறைவாக இருந்தது. கடல் சீற்றத்தால் வேதாரண்யம் பகுதியில் உள்ள எந்த மீனவ கிராமத்திலும் பாதிப்பும் இல்லை. வேதாரண்யம் பகுதியில் செய்யப்பட்டுள்ள நெல் சாகுபடிக்கு அதிக அளவு மழை தேவைப்படுகிறது. ஓரளவு இந்த காலத்தில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தாலும் போதிய அளவு மழை இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3ஆயிரம் விலை நிர்ணயிக்கவேண்டும் ரங்கசாமியிடம், கரும்பு விவசாயிகள் கோரிக்கை**



புதுச்சேரி

கரும்புக்கு விலையாக டன் ஒன்றுக்கு ரூ.3ஆயிரம் நிர்ணயிக்கவேண்டும் என்று முதல்–அமைச்சர் ரங்கசாமியிடம் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

<u>ரங்கசாமியிடம் கோரிக்கை</u>

புதுவை லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கும் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு தலைவர் கணேசன் தலைமையில் நிர்வாகிகள் முதல்–அமைச்சர் ரங்கசாமியை சட்டசபையில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:–

<u>ரூ.3ஆயிரம் விலை</u>

*2012–13–ம் ஆண்டு வெட்டி அனுப்பிய கரும்பிற்கு முத்தரப்பு கூட்டத்தை கூட்டி டன்னுக்கு விலை ரூ.3ஆயிரம் வழங்கிட வேண்டும்.

*விவசாயிகளிடம் பிடித்தம் செய்த ரூபாயை உடனடியாக வங்கிக்கு வட்டியுடன் செலுத்தி விவசாயிகளின் கடனை பைசல் செய்யவேண்டும். கரும்பு

விவசாயிகளுக்கு சேரவேண்டிய தொகையை அவரவர் வங்கிக்கணக்கில் நேரடி பரிமாற்றம் செய்யவேண்டும்.

*விதைப்புல் மானியம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.10ஆயிரம் வழங்கவேண்டும். 2013–14ம் ஆண்டு வெட்டி அனுப்பும் கரும்பிற்கு 15நாட்களில் பட்டுவாடா முழு தொகையாக விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.*தமிழ்நாடு விவசாயிகள் 70சதவீதம் கரும்பையும், புதுவை விவசாயிகள் 30சதவீத கரும்பையும் சப்ளை செய்கின்றனர். ஆனால் தமிழக விவசாயிகள் பெற வேண்டிய சலுகைகள் மறுக்கப்படுகின்றன. புதுவை அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து தமிழக விவசாயிகளுக்கு வழங்கவேண்டும். கண்காணிப்புக்குழு *தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ளதுபோன்று ஆலையை நவீனப்படுத்தி 4ஆயிரம் டன் கரும்பு அரவை திறன் கொண்டதாக மாற்றி புதுவை அரசு லாபத்தில் இயங்க வழிவகை செய்யவேண்டும்.

*தமிழ்நாடு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளில் கண்காணிப்புக்குழு அமைத்து சர்க்கரை விலை நிர்ணயம் செய்வது, கரும்பு உயர்ரக விதைகளை தேர்வுசெய்தல், ஆலைகளுக்கு உண்டான பொருட்களை வாங்குவது போன்ற வேலைகளை செய்வதுபோல் இந்த ஆலையிலும் விவசாயிகளின் கண்காணிப்புக்குழு அமைக்கவேண்டும்.*கரும்பு விவசாயிகளின் மொத்த பணத்தையும் அவரவர் விரும்பும் வங்கிக்கணக்கிற்கு அனுப்பி வைக்கவேண்டும்.மேற்கண்டவாறு அந்த கோரிக்கை மனுவில் கூறப்பட்டுள்ளது.

**சம்பா நெல் விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர வேண்டும் வருகிற 31–ந் தேதி கடைசி நாள்**



கடலூர்

கடலூர் வட்டாரத்தில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வருகிற 31–ந் தேதிக்குள் மாற்றி அமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு பிரீமிய தொகை ரூ.1515 ஆகும். இதில் மாநில அரசின் மானிய தொகை ரூ.909 போக மீதமுள்ள ரூ.606–யை விவசாயிகள் உடனடியாக அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது வர்த்தக வங்கிகளிலோ செலுத்தலாம். இதற்குரிய படிவம் கடலூர், தூக்கணாம்பாக்கம், கீழ்குமாரமங்கலம் ஆகிய துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்கும். விவசாயிகள் இறுதிநாள் வரை காத்திருக்காமல் உடனே தங்களது நெற்பயிரை காப்பீடு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்ட தகவலை கடலூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**சேத்தியாத்தோப்பு அருகே திருந்திய நெல் சாகுபடி வயலில் பாக்டீரிய நோய் பாதிப்பு வேளாண்மை அதிகாரிகள் நோய் தடுப்பு மருந்து தெளிப்பு**

சேத்தியாத்தோப்பு

சேத்தியாத்தோப்பு அருகே அள்ளூர் கிராமத்தை சேர்ந்தவர் கோபாலகிருஷ்ணன்(50) விவசாயி. இவர் தனக்கு சொந்தமான 7 ஏக்கர் விவசாய விளை நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்திருந்தார். சாகுபடி செய்யப்பட்ட அவரது வயலில் உள்ள நெறநபயிர்களை பாக்டீரியா நோய் தாக்கியது. இதுகுறித்து விவசாயி கோபாலகிருஷ்ணன் வட்டார வேளாண்மைத்துறை அதிகாரிக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில், வேளாண்மை அதிகாரிகள் பாக்கியராஜ், விஜயகுமார், பழனிவாசன் ஆகியோர் கோபாலகிருஷ்ணனின் திருந்திய நெல் வயலை பரிசோதனை செய்தனர். பரிசோதனையில் திருந்திய நெல் சாகுபடி நெற்பயிர்கள் பாக்டீரியா நோயினால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டது. அதைத்தொடர்ந்து, பாக்டீரியாநோயை கட்டுப்படுத்துவதற்காக கைத்தெலிப்பான் மூலம் நெல் வயலுக்கு காப்பர் ஆக்ஸ்குளோரைடு மற்றும் பாக்டீரியா மைசின் மருந்துகள் தெளிக்கப்பட்டது.

இதுகுறித்து, வேளாண்மை அதிகாரி விவசாயி கோபாலகிருஷ்ணனிடம் கூறுகையில் மருந்து தெளிக்கப்பட்ட பின்னர் மீண்டும் வயல்களில் உள்ள நெற்பயிர்களை பாக்டீரியா நோய் தாக்கினால் உடனடியாக வேளாண்மை துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ளவேண்டும் என கூறினார்.

**நீர் பிடிப்புபகுதியில் மழை எதிரொலி: வீராணம் ஏரியில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தம்**



காட்டுமன்னார்கோவில்

நீர் பிடிப்பு பகுதியில் மழை பெய்ததால், தற்போது விவசாயத்திற்கு தண்ணீர் தேவை குறைந்துள்ளதை அடுத்து வீராணம் ஏரியில் வி.என்.எஸ். மதகை தவிர்த்து ஏனைய மதகுகளில் தண்ணீர் திறந்து விடும் பணி தற்காலிகாமாக நிறுத்தப்பட்டுள்ளது.

<u>முக்கிய நீர் ஆதாரம்</u>

காட்டுமன்னார்கோவில் அருகே லால்பேட்டையில் அமைந்துள்ள வீராணம் ஏரி. இது கடலூர் மவாட்டத்தின் மிகப்பெரிய நீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. மேலும் சென்னைவாழ் மக்களின் தாகத்தை தணிப்பதற்காகவும், இங்கிருந்து தண்ணீரானது, ஏரியின் நீர் மட்டத்திற்கு ஏற்ப விநாடிக்கு 76 கன அடி வரையில் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் நீர்மட்டம் 47.50 அடியாகும். இதை கடல் மட்டத்தில் இருந்து கணக்கிடுகிறார்கள்.

வீராணத்தை நம்பி காட்டுமன்னார்கோவில் பகுதியில் சுமார் 48 ஆயிரம் ஏக்கர் வரையில் பாசன வசதி பெற்று வருகிறது. இதற்கென ஏரியில் கீழக்கரை,

மேலக்கரை ஆகிய பகுதிகளில் மொத்தம் 34 மதகுகள் மூலம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

ஏரியின் நீர் ஆதாரத்தை பொறுத்தமட்டில் சாதாரண காலங்களில் வடவாறு வழியாகவும், மழைக்காலங்களில் ஏரியின் நீர்பிடிப்பு பகுதியில் பெருக்கெடுத்து ஓடிவரும் மழை நீர் செங்கால் ஒடை, கருவாட்டு ஓடை, வெண்ணங்குழி ஓடை ஆகியவற்றின் வழியாக ஏரிக்கு வந்து சேர்கிறது.

<u>45.90 அடி நீர் இருப்பு</u>

இந்த நிலையில், தற்போது வங்ககடலில் உருவான மேடி புயல் காரணமாக, நேற்று முன்தினம் ஏரியின் நீர் பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்தது. இதன் எதிரொலியாக கீழணையில் இருந்து வடவாறு வழியாக விநாடிக்கு 300 கனஅடி அளவில் தண்ணீர் வரத்து உள்ளது. இதன் அடிப்படையில் நேற்று மாலை நிலவரப்படி ஏரியில் 45.90 அடி அளவில் தண்ணீர் இருப்பு உள்ளது.

<u>தேவை குறைவு</u>

தற்போது, சம்பா சாகுபடி தீவரமாக நடந்து வரும் காரணத்தினால், விவசாயத்திற்காக ஏரி பாசன மதகுகளின் வாயிலாக கடந்த சில தினங்களாக குறிப்பிட்ட அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இந்த நிலையில், தற்போது பெய்த மழையால், விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் அளவு குறைந்துள்ளது. எனவே, தற்போது ஏரியில் 34 மதகுகளில் வாயிலாக வெளியேற்றப்பட்டு வந்த தண்ணீரானது நேற்று காலை முதல் 33 மதகுகளில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மாறாக சேத்தியாத்தோப்பு வி.என்.எஸ். மதகில் இருந்து மட்டும் விநாடிக்கு 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அதேபோல் சென்னைக்கு விநாடிக்கு 74 கனஅடி என்கிற அளவில் தண்ணீர் அனுப்பபடுகிறது. கீழணையை பொறுத்தவரையில் மொத்த அளவான 9 அடிக்கு 8 அடி என்கிற நிலையில் தண்ணீர் இருப்பு உள்ளது.

**பொன்னமராவதியில் வேளாண்மை திட்ட பணிகளை இணை இயக்குனர் ஆய்வு**



பொன்னமராவதி,

பொன்னமராவதியில் நடந்து வரும் வேளா ண்மை திட்ட பணிகளை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

<u>அதிகாரி ஆய்வு</u>

பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட்ட வேளா ண்மை திட்டப் பணிகளை, மாவட்ட வேளா ண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் கள ஆய்வு செய்தார். அவர் இடையபுதூர் மற்றும் கருப்பர் கோவில்பட்டி கிராமங்களில் நடவு செய்யப்பட்டுள்ள துவரை செயல்விளக்கதிடலை பார்வையிட்டு, தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார்.

பின்னர் இடையபுதூர் கிராமத்தில் விதைப்பு செய்யப் பட்டுள்ள பயறுவகை அணு சரணை ஆராய்ச்சி திடலை பார்வையிட்டு, டி.ஏ.பி. கரைசல் தெளித்திட பரிந் துரை செய்தார். வேகுபட்டி கிராமத்தில் தேசிய வேளா ண்மை வளர்ச்சித் திட்டத் தின் கீழ் திருந்திய நெல் சாகு படி செயல்விளக்க திடலை பார்வையிட்டு தொழில் நுட்ப ஆலோசனை கூறினார். டி.பி.டி. 5,204 ரக நெல் விதைப் பண்ணையை பார்வையிட் டார்.

<u>கருவிகள்</u>

அம்மன்குறிச்சி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நெல் பயிர் மதிப்பீட்டாய்வு பாத்திகளை பார்வையிட்டு எதிர்பார்க்கப்படும் மகசூல் காரணிகளை ஆய்வு

செய்தார். தேசிய உணவு பாதுகாப்பு குழுமத் திட்டத்தின் கீழ் 7 விவசாயிகளுக்கு தலா ரூ.30 ஆயிரம் மானியத்தில் மொத்தம் 2.1 லட்சம் மதிப்பி லான ரோட்டர்வேட்டர் கருவி களை விவசாயிகளுக்கு வழங் கினார்.

இதற்கான ஏற்பாடுகளை, பொன்னமராவதி ஒன்றியக் குழு தலைவர் அழகு சுப் பையா, பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கந்தசாமி, வேளாண்மை அலுவலர் ரமேஷ், துணை வேளாண்மை அலுவலர் எலிசபெத்ராணி வேளாண்மை உதவி அலுவலர் கள் மணிமுத்து, குமாரசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

**மருத்துவ குணமும், ஊட்டச்சத்தும் நிறைந்தவை: அழிவின் விளிம்பில் தென்மாவட்ட நாட்டு பசு இனங்கள் புலிக்குளம், தென்பாண்டி பசு இனங்கள் காக்கப்படுமா?**



மதுரை

மதுரை, சிவகங்கை, தேனி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் வளர்க்கப்பட்ட புலிக்குளம், தென்பாண்டி உள்ளிட்ட நாட்டு மாட்டு இனங்கள் மறைந்து வருகின்றன. நாட்டு இன மாடுகளை அழிவில் இருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<u>மனிதனின் உற்ற நண்பன்</u>

மனித நாகரீகம் தோன்றி விவசாயம் செய்யத் தொடங்கிய போது உழவில் மனிதனுக்கு உதவியாக கால்நடைகள் இருந்து வருகின்றன. குறிப்பாக, பசும்பால்

தாய்ப்பாலுக்கு நிகரானதாக கருதப்படுகிறது. கால்நடைகளை செல்வங்கள் என்று அழைத்தார்கள்.

உலகின் அத்தனை நாடுகளிலும் பால்பண்ணை தொழில் மிக முக்கியமான தொழிலாக இருந்து வருகின்றது. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் பருவ நிலைக்கு ஏற்ற இனங்கள் இருந்து வருகின்றன.

இங்கிலாந்து நாட்டில் ஜெர்சி, பீரீசியன் உள்ளிட்ட சில இனங்கள் காணப்படுகின்றன. இந்தியாவின் வடமாநிலங்களில் சிந்து, சாகிவால், தார்பார்கர், சிந்து மாடு உள்ளிட்ட இனங்கள் இருக்கின்றன. தமிழகத்தை பொறுத்தமட்டில் காங்கேயம், திருச்செங்கோடு, ஆலம்பாடி, புலிக்குளம், தம்பிரான், தென்பாண்டி என்பன உள்பட 17 இன வகையான மாட்டு இனங்கள் இருந்து வந்துள்ளன. பசு மற்றும் காளை இனங்கள் காலம்காலமாக குறிப்பிட்ட பகுதிகளை வசிப்பிடமாக கொண்டும் அந்த இடங்களில் கிடைக்கும் தாவரங்கள், மூலிகைககளை உணவாக உண்டு அந்த சூழலில் ஏற்படும் நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை பெற்று விளங்குகின்றன.

<u>அரிய சத்துகள்</u>

இதனால், பருவகால மாறுபாடுகளால் இந்த இனங்கள் பாதிக்கப்படுவதில்லை. தற்போது தமிழகத்தில் கோமாரி நோய் தாக்குதலுக்கு இங்கிலாந்து நாட்டின் ஜெர்சி மற்றும் பிரீசியன் இனத்தால் கலப்பினமாக உருவாக்கப்பட்ட மாடுகள் தான் பாதிக்கப்பட்டன.

உலக அளவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் இந்திய மாட்டு இனங்கள் தரும் பாலில் எச்.டி.எல். என்ற நல்ல கொழுப்பு சத்து மற்றும் தாதுஉப்புகள் இருப்பதாக கண்டறிந்துள்ளனர். இந்த வகை சிறப்பம்சங்கள் கொண்ட பாலை ஏ2 வகை பால் என்கிறார்கள்.

இந்திய நாட்டு மாட்டு இனங்கள் கறக்கும் பாலானது ஏ2 தரத்தை கொண்டவை என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஏ2 வகை பாலில் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தி, மூளை வளர்ச்சிக்கு தேவையான சத்துக்கள் உள்ளிட்ட பல அரிய சத்துக்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

<u>உயர்வகை மாட்டினங்கள்</u>

இந்திய மாட்டினங்களின் வயிற்றில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் அதிகம் இருப்பதால் இவற்றின் சாணத்தின் மூலம் தயாரிக்கப்படும் உரம் மிகுந்த சத்துள்ளதாக கருதப்படுகிறது. பொதுவாக, வெளிநாட்டு மாட்டு இனங்கள் போல் சிறப்பு தீவனங்கள் எதுவும் இல்லாமல் இந்திய மாட்டு இனங்கள் மேய்ச்சலை நம்பியே வாழக்கூடிய திறன் படைத்தவை.

தமிழக மாட்டு இனங்கள் வறட்சி, பஞ்சத்தை தாங்கி வாழக்கூடிய தன்மை படைத்தவை. இந்திய நாட்டு மாடுகளை அபாயகரமான நோய்களான கோமாரி உள்ளிட்ட வைரஸ் நோய்கள் தாக்குவதில்லை என்பது இவற்றின் நோய் எதிர்ப்பு திறனுக்கு சிறந்த அத்தாட்சியாகும்.

உலகநாடுகளில காணப்படும் மற்ற எல்லா இன பசுக்களையும் விட பல சிறப்பு அம்சங்கள் கொண்ட பசுக்களும், காளைகளும் தமிழகத்தில் இருந்து வந்துள்ளன. தமிழகத்தில் காங்கேயம், திருச்செங்கோடு, ஆலம்பாடி, பர்கூர், பாலமலை, கொல்லிமலை, பெரம்பலூர், மணப்பாறை, உம்பளாச்சேரி, இருச்சாளி, புலிக்குளம், தம்பிரான், தென்பாண்டி, திருவண்ணாமலை, துரிஞ்சித் தாழை, நடுமாடு, புங்கனூர் குட்டை என்று 17 வகையான மாட்டு இனங்கள் இருந்ததாக கணக்கிடப்பட்டுள்ளன.

<u>உழக்கு ஏற்ற இனம்</u>

இதில் பர்கூர் மற்றும் காங்கேயம் இன மாடுகள் கோயம்புத்தூர் மாவட்டத்தை சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவில் வளர்க்கப்பட்டுள்ளன. உழவுக்கும், வண்டி இழுக்கவும் ஏற்ற ரகமாக இது இருந்து வந்துள்ளது.

ஆலம்பாடி இன மாடுகள் தருமபுரி மாவட்டத்தை சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் வளர்க்கப்பட்டுள்ளன. பெரிய உடல்வாகும் உடல் கருப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். விவசாயிகளால் இந்த ரக மாடுகள் விரும்பி வளர்க்கப்படும் உழவுக்கு ஏற்ற இனம் இது. ஏ2 வகை பாலிற்கான சிறந்த ரகமாக இது தேர்வு செய்யப்பட்டுள்ளது. புளிக்குளம் இன மாடுகள் மதுரை, சிவகங்கை, தேனி மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்டது. கிடைமாடுகளாக பயன்படுத்தும் இனம் இது. சிறிய உடல் அமைப்பும், ஏ2 வகை பாலுக்கும் ஏற்ற ரகமாக கருதப்படுகிறது.

## காப்பாற்றப்படுமா?

தமிழகத்தில் உள்ள நாட்டு பசுக்களுடன் அயல் நாட்டு காளைகளை இணைத்து கலப்பினங்களை உருவாக்கினார்கள். நாட்டு இனங்களை கண்டு கொள்ளாமல் விட்டதால் தற்போது இந்த வகை பசுக்களும், காளைகளும் ஒட்டு மொத்தமாக அழியும் நிலையில் உள்ளன. நாட்டு மாடுகள் தற்போது அடிமாடுகளாக கேரளாவிற்கு கொண்டு செல்லப்பட்டு இறைச்சியாக மாற்றப்படுகிறது.

மக்கள் தொகை அதிகரித்து பாலின் தேவை அதிகரித்ததால் குறைந்த அளவே பால் தரும் நாட்டு இன மாடுகள் புறந்தள்ளப்பட்டன. இவற்றுக்கு பதிலாக அயல் இனங்களுடன் கலப்பினம் செய்யப்பட்ட ஜெர்சி மாடுகள் அறிமுகம் செய்யப்பட்டன. இந்த மாடுகள் சிறிய நோய் தாக்குதலுக்கு கூட தாக்குப்பிடிக்காததால் விவசாயிகளுக்கு கடுமையான இழப்பு ஏற்படுகிறது.

தமிழக அளவில் தற்போது பெரும்பாலும் கலப்பின ஜெர்சி பசுக்கள் தான் வளர்க்கப்பட்டு வருகின்றன. கலப்பின பசுக்கள் தமிழகத்தின் தட்ப வெப்பத்திற்கும் பருவ கால மாற்றத்திற்கும் தாக்குப்பிடிக்க முடியாமல் அடிக்கடி தொற்று நோய் தாக்குதலுக்கு இலக்காகின்றன. இதனை கருத்தில் கொண்டு தான் அரசு கால்நடைகளுக்கு காப்பீட்டு திட்டங்களை அறிவித்துள்ளது.

<u>மண்ணுக்கேற்ற இனங்கள்</u>

ஆனால் பெரும்பாலான விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை காப்பீடு செய்ய முன்வருவது இல்லை. அதே நேரத்தில் கால்நடைகள் நோய்களில் சிக்கி இறக்கும் போது அரசாங்கத்திடம் இருந்து இழப்பீட்டை எதிர்பார்க்கின்றனர். கால்நடைகளை இழந்தவர்களுக்கு இழப்பீடு தருவது ஒரு புறம் இருந்தாலும் மக்களுக்கு தேவையான பால் உற்பத்தி இதுபோன்ற நோய் தாக்கும் தருணங்களில் குறைந்து போகிறது. இந்த நிலையை மாற்ற மீண்டும் தமிழகத்தில் மண்ணுக்கேற்ற நாட்டு இன பசுக்களை கால்நடைகள் விவசாயிகள் வளர்ப்பதற்கேற்ற சூழலை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள நாட்டு இன பசுக்களையும், காளைகளையும் அழிவில் இருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கால்நடை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**<u>உலகம் முழுக்க விரும்பும் இந்திய பசு இனம்</u>**

தமிழக நாட்டு இன பசுக்களின் சிறப்பம்சங்கள் குறித்து அரசு கால்நடை உதவி மருத்துவர் சரவணன் கூறியதாதவது, “தமிழகத்தில் நாட்டு இன மாடுகள் அதிகரிக்கும் சூழல் ஏற்படும் போது மக்களுக்கு மருத்துவ குணம் மிகுந்த நாட்டு மாட்டு பால் கிடைக்கும். இந்த பாலை உண்ணும் போது உடல் உறுதி, நோய் எதிர்ப்பு சக்தி, நல்ல மூளை வளர்ச்சி உள்பட பல நன்மைகள் மனிதர்களுக்கு கிடைக்கும். தற்போது நாம் உட்கொள்ளும் ஜெர்சி இன பசுவின் பாலில் சத்துக்கள் இருந்தாலும் நாட்டு மாடுகளின் பாலுக்கு ஈடாக முடியாது.

வடமாநில இனமான சிந்து இன மாடுகளை மட்டும் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், ஈராக், மியான்மியர், டான்சானியா, மலேசியா, இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு கொண்டு சென்று அந்தந்த நாட்டு இனங்களுடன் கலப்பினம் செய்கின்றன. நமது நாட்டு சிந்து இன பசு சிறிய உடல் எடையுடனும், கட்டான உடலும், அதிக நோய் எதிர்ப்பு சக்தியும், பெரிய பால் மடியும் கொண்ட சிறந்த இனமாக இருப்பதால் இவ்வாறு கலப்பினம் செய்ய விரும்பி அயல்நாட்டினர் தேர்வு செய்கின்றனர்.

நாட்டு மாடுகளுக்கு நம் மண்ணில் விளையும் சில புல்வகைகளே போதுமானது. இதுதவிர சிறிய அளவு தவிடு, புண்ணாக்கு, பருத்தி விதைகளை கொடுத்தால் போதுமானது. அதாவது நாட்டு மாடுகளில் 1 லிட்டர் பாலை பெற 8 முதல் 10 ரூபாய் செலவு செய்தாலே போதுமானது. சிறிது முயற்சித்தால் நமது நாட்டிலேயே அதிக பால் தரும் இனங்களை தேர்வு செய்து நாட்டு மாடுகளிலேயே புதிதாக அதிக பால் தரும் இன பசுக்களை உருவாக்கலாம்" என்றார்.

**'மேடி' புயல், தொண்டி அருகே கரையை கடந்தபோது பலத்த சூறாவளிக்காற்று: பாம்பன் ரெயில் பாலத்தில் படகு மோதியது**



ராமேசுவரம்,

'மேடி' புயல், தொண்டி அருகே கரையை கடந்தபோது பலத்த சூறாவளிக்காற்று வீசியது. அப்போது, நங்கூரக்கயிறு அறுந்து மீன் பிடி படகு ஒன்று பாம்பன் ரெயில் பாலத்தின் மீது மோதியது. ஆனால் பாலம் சேதமின்றி தப்பியது.

<u>'மேடி' புயல்</u>

வங்கக் கடலில் உருவாகியிருந்த ‘மேடி’ புயல், வலுவிழந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே கரையை கடந்தது. அந்த நேரத்தில் ராமேசுவரம், பாம்பன், தொண்டி கடற்கரை பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசியது. அதோடு பலத்த மழையும் கொட்டியது.

சூறாவளிக் காற்று வீசியபோது, ராமேசுவரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசைப்படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. இதில் 20 படகுகள் பலத்த சேதம் அடைந்தன.

பாலத்தில் மோதல்

பாம்பன் வடக்கு கடல் பகுதியில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரன்ராஜ் என்பவருக்கு சொந்தமான மீன்பிடி நாட்டுப்படகின் நங்கூரக் கயிறுகள் திடீரென அறுந்தன. இதனால் அந்த நாட்டுப்படகு காற்றின் வேகத்தில் இழுத்துச்செல்லப்பட்டு, பாம்பன் ரெயில் பாலத்தின் 124–125–வது தூண்களுக்கு இடைப்பட்ட இரும்பு உத்திரத்தின் அடிப்பகுதியில் உரசியபடியும், தொலை தொடர்பு கேபிள் சென்ற இரும்புக்குழாய் மீது மோதியபடியும் நின்றது.

இது குறித்து தகவல் அறிந்ததும் ரெயில்வே பொறியாளர்களும், ரெயில்வே பாதுகாப்பு படையினரும் இரவோடு இரவாக விரைந்து வந்தனர். அவர்கள் பாலத்தின் மீது படகு மோதிய இடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். படகின் உரிமையாளரிடம் ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார் விசாரணை நடத்தினர்.

ரெயில்வே பொறியாளர்கள் கடலில் இறங்கி இரும்பு உத்திரத்திலும், தூணிலும் சேதம் ஏதும் ஏற்பட்டதா என 2 மணி நேரத்திற்கு மேலாக தீவிர ஆய்வு செய்தனர். ஆனால், நல்ல வேளையாக பாலத்தின் தூண்களுக்கோ, இரும்பு உத்திரத்திற்கோ எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

ரெயில்கள் ஓடின

எனவே, வழக்கம் போல் ரெயில்களை இயக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, நேற்று அதிகாலை சென்னையில் இருந்து வந்த சேது எக்ஸ்பிரஸ் ரெயில் உள்ளிட்ட அனைத்து ரெயில்களும் ரெயில் பாலம் வழியாக இயக்கப்பட்டன.

பின்பு, நேற்று பகலிலும் ரெயில்வே பொறியாளர்கள் படகு மோதிய பகுதியில் ஆய்வு செய்தனர். தண்டவாளங்களை தாங்கி நிற்கும் இரும்பு உத்திரத்தின் மட்டம் சரியாக உள்ளதா என்று பெரிய அளவு கோல் மூலம் அளந்தனர். அப்போது அனைத்தும் சரியாக உள்ளது உறுதி செய்யப்பட்டது.

பாம்பன் ரெயில் பாலத்தின் நூற்றாண்டு விழா வருகிற பிப்ரவரி மாதம் 24–ந் தேதி நடைபெறவுள்ள நிலையில், இரண்டாவது முறையாக இப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளது. கடந்த ஜனவரி 12–ந் தேதி நள்ளிரவு பாம்பன் ரெயில் பாலத்தின் 121–வது தூண் மீது இழுவைக்கப்பல் (பார்ஜர்) ஒன்று மோதியது. இதில் தூண் முழுமையாக சேதமடைந்து புதிய தூண் மாற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் பாலத்தில் படகு மோதியது 2–வது விபத்தாகும்.

எச்சரிக்கை கூண்டு இறக்கப்பட்டது

இதற்கிடையே, மேடி புயல் தொண்டி அருகே கரையை கடந்ததைத் தொடர்ந்து, பாம்பன் துறைமுக அலுவலகத்தில் ஏற்றப்பட்டிருந்த 3–வது எண் புயல் எச்சரிக்கை கூண்டு நேற்று காலை இறக்கப்பட்டது.

**குமரி மாவட்டத்தில் பெய்த மழையால் 1,027 குளங்கள் நிரம்பின அதிகாரி தகவல்**



நாகர்கோவில்,

குமரி மாவட்டத்தில் பெய்த மழையால் 1,027 குளங்கள் நிரம்பின என்று பொதுப்பணித்துறை அதிகாரி கூறினார்.

மழை

குமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக அளவு மழை பெய்துள்ளது. இதனால் அணைகளின் நீர் மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை 26.90 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 128 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பாசனத்துக்காக 150 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 123 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 150 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 60.25 அடியாக உள்ளது.

மாம்பழத்துறையாறு அணை

மாம்பழத்துறையாறு அணையின் மொத்த கொள்ளளவு 54 அடியாகும். நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 53.72 அடியாக இருந்தது. அணை வேகமாக நிரம்பி வருகிறது. இதுபற்றி பொதுப்பணித்துறை (நீர்வளம் ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் சுப்பிரமணியத்திடம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுமா? என்று கேட்ட போது அவர் கூறியதாவது :–

மாம்பழத்துறையாறு அணை நிரம்பி வருகிறது. அணை முழு கொள்ளளவை எட்டியதும், உபரிநீர் அப்படியே பாசனத்துக்காக திறந்து விடப்படும்.

1027 குளங்கள் நிரம்பின

குமரி மாவட்டத்தில் மொத்தம் 2040 குளங்கள் உள்ளன. இவற்றில் 1,027 குளங்கள் முழுமையாக நிரம்பி விட்டன. 685 குளங்கள் 75 சதவீதம் நிரம்பி உள்ளன. மற்ற குளங்களின் நீர்மட்டமும் திருப்திகரமாக உயர்ந்து வருகின்றது.

இதனால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடும் போது, மழை பெய்தால் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரில் அளவை குறைத்தும், மழை இல்லாமல் இருந்தால் அளவை உயர்த்தியும் வழங்கி வருகிறோம். அணைகள் அனைத்தும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சுப்பிரமணியம் கூறினார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 அடியாக குறைந்தது**



மேட்டூர்,

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்ததால் நீர்மட்டம் 80 அடியாக குறைந்தது.

**மேட்டூர் அணை**

தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த மாதம் பெய்த கனமழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அதே நேரத்தில் காவிரி டெல்டா பாசன பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 3 ஆயிரம்

கனஅடியாக குறைக்கப்பட்டது.அணைக்கு நீர்வரத்து அதிகரித்து இருந்த நிலையில் அணையில் இருந்து பாசன தேவைக்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால் கடந்த ஒரு வாரமாக அணையின் நீர்மட்டம் அதிகரித்து வந்தது.

## 80 அடியாக குறைந்தது

இந்த நிலையில் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைய தொடங்கியது. மேலும் அணையில் இருந்து பாசனத்தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு கடந்த 9–ந் தேதி முதல் வினாடிக்கு 9 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து தற்போது வினாடிக்கு 1300 கன அடியாக உள்ளது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் தினசரி குறைந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 80.32 அடியாக இருந்தது.